உ

கடவுள்துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உகூ.] விபவஹூ ஆடிமீ [பகுதி—கூ.

Vol. XXVI. July-August-1928. No. 9.

## பிரகிருதிசாஸ்த்ரம்.

## (PHYSICAL SCIENCE)

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்

ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் M.A., எழுதியது)

### பௌதிகம். (Physics).

### III. ஒளி (Light).

[உகூ0—ம் பக்கத் தொடர்ச்சி].

### கதிர்க்கோட்டவியல் (Refraction).

கதிர்க்கோட்டம் (Refraction) ஒரு பொருளினின்று கதிர்கள் மற்றொருபொருளினூடே செல்லுங்கால் நிகழ்வதாகும். படம் 10-ல் த் த என்னும் தாக்குக்கதிர் காற்றினூடேசென்று ந என்னும் புள்ளியில் ப ப என்னும் சமபாப்பிற் றாக்குகிறது. ப ப வுக்குக் கீழேயுள்ள பொருள் தண்ணீரெனக் கொள்ளுவோம். ப பவுக்குக் கீழே தண்ணீருக்குப் பதிலாகக் காற்றே இருக்குமானால் த த என்னும் கதிரானது தனது திசையிற் சிறிதும் கோடாது தி தி என்னும் வழியே செல்லும். காற்றைக் காட்டிலும் செறிந்த பொருளாகிய தண்ணீர் ப ப வுக்குக் கீழேயிருப்பதால், கதிரானது திசை கோடி, க க வென்னும் திசையினூடே செல்லுகின்றது. இவ்விதமாகத் திசைகோடிச்செல்லும் கதிருக்குக் கோட்டக்கதிர் (Refracted Ray)




படம் 10.

எனப் பெயர். தாக்குப்புள்ளியாகிய ந வில் நா நி என்னுமோர் நெட்டுக்கோட்டினை வரைந்துகொண்டால், கதிர்க்கோட்டத்தின் இரண்டு முக்கிய குணாதிசயங்கள் புலப்படும். முதலாவதாக, தாக்குக்கதிரும் (Incident Ray) கோட்டக்கதிரும் (Refracted Ray) தாக்குப் புள்ளியில் வரைந்த நெட்டுக்கோட்டின் (Normal at the point of incidence) எதிர்ப்புறங்களில் ஒரே சமபரப்பி லுள்ளன. இரண்டாவதாக, தாக்குக்கதிரைக்காட்டிலும் கோட்டக்கதிரானது நெட்டுக் கோட்டை அதிகமாக நெருங்கியிருக்கின்றது.

படம் 11 ல், ஒரு கதிரானது தண்ணீர்போன்ற செறிந்தபொருளிலிருந்து வாயுவைப்போன்ற இலேசானபொருளுக்குச் செல்லுங்கால் ஏற்படும் கதிர்க்கோட்டம் விளக்கப்பட்டுள்ளது. இதில் த த வென்னும் தாக்குக்கதிர் (Incident Ray) ந என்னும் புள்ளியில் தண்ணீரினூடே சென்று தாக்கி, கோட்டம்பெற்று, க க வென்னும் மார்க்கமாகக் காற்றினூடேசெல்லுகின்றது. கோட்டக்கதிர் (Refracted Ray) ஆகிய க க, தாக்குக்கதிர் (Incident Ray) ஆகிய த த வினைக்காட்டிலும் நெட்டுக்கோடாகிய நா நி யிலிருந்து விலகியிருக்கின்றது.




படம் 11.

படம் 10ல் உள்ளதைக் குவிகோட்டம் எனக் கூறினால், படம் 11-ல் உள்ளதை விரிகோட்டம் எனக் கூறுதல் பொருந்தும். இவ்விரண்டுக்கும் பொதுவானதன்மை ஒன்று தெரிகின்றது. ஒருகதிரானது இருபொருள்களுக்குப் பொதுவெல்லையாகியதோர் சமபரப்பைக் கடந்துசெல்லுங்கால் இலேசானபொருளில் இருப்பதைக்காட்டிலும் செறிந்தபொருளிற் கதிரானது தாக்குப்புள்ளியிலிட்ட நெட்டுக்கோட்டை அதிகமாக அணுகியிருக்கின்றது.

படம் 12ல், ஒரு நான்குமூலைப்படக்கான ச ச ச ச வென்னும் பளிங்குத்துண்டினூடே கதிர்செல்லும் வகை காட்டப்பட்டிருக்கிறது,

வ என்னும் நுண்ணிய வஸ்துவினின்று ஒரு கதிர் புறப்பட்டு ந என்னும் புள்ளியிற் றாக்குகிறது. கண்ணாடி வாயுவைக்காட்டிலும் செறிந்தபொருள் ஆதலான், ந நா என்னும் கோட்டக்கதிர் நெட்டுக்கோட்டினை நெருக்கியே செல்லுகின்றது. இக்கதிர் பளிங்கின் எல்லையிலுள்ள நா வென்னும் மார்க்கமாகக் கோடி நா விலுள்ள நெட்டுக்கோட்டைவிட்டு விலகிச் செல்லுகின்றது. நா வா வின் திசையைப் பின்புறமாக நீட்டிச்சென்றால் வஸ்துவானது நி என்னுமிடத்திலிருப்பதுபோலத் தோன்றும். அதாவது வா நா என்னும் மார்க்கத்தில் கண்விழியை வைத்துப்பார்த்தால் நி என்னுமிடத்தில் வஸ்துவின்து கோட்டநிழல் (Refracted Image) தோன்றும்.



படம் 12.

இக் கதிர்க்கோட்டம் காரணமாக வற்படும் ஒரு சாதாரணநிகழ்ச்சியை ஆராய்வோம். இது பலர்க்கும் அநுபவபூர்வமாக வற்பட்டிருக்கக்கூடும். ஒரு தொட்டியில் 4 அடி ஆழம் தண்ணீர் நிரப்பினால், ஆழம் 3 அடியேபோலக் காட்சிக்குத் தோன்றுகிறது. இது எங்ஙனம்? என்பது படம் 13 ஐ நோக்கக் கிடைக்கும். ஒரு பெரிய தொட்டியில் தொ தொ என்ற அளவுக்குத் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கிறது. ப ப என்பது தொட்டியின் அடித்தடமாகும். வ என்பது தொட்டியின் அடித்தடத்திலுள்ளதோர் புள்ளி. அதிலிருந்து புறப்படும் கதிர்களாகிய வ த ந, வ தா நா என்பவை ந, நா என்னும் புள்ளிகளில் தண்ணீரைவிட்டு



படம் 13

வாயுவிற் செல்லுங்கால் படத்திற்காட்டியவாறு கோட்டம்பெற்று, ந க, நா கா வென்னும் திசைகளிற்சென்று நிழல் காண்பவரது விழியிற்சென்றடைகின்றன. கோட்டக்கதிர்களாகிய ந க, நா கா என்பவற்றினைப் பின்புறமாக நீட்டிச்சென்றால் அவை நி என்னும் புள்ளியிற் சுத்தரிக்கும். இப் புள்ளியிலேயே வ வினது நிழல் கிடைக்கும். வ என்னும் புள்ளியினது நிழலாகிய நி என்னும் புள்ளியானது, வ வுக்குமேல் ஒரு அடி உயரத்தில் தோன்றும். இங்ஙனமே, அடித்தடமாகிய ப ப வி லுள்ள ஒவ்வொரு புள்ளியும், அதற்குமேல் ஒருஅடி உயரத்தில் தனது நிழலை அளிக்கின்றது. ஆகவே அடித்தடம் பி பி யிலிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆதலால், தண்ணீரின் ஆழம் 4 அடியேயானாலும் பார்ப்பவர்க்கு 3 அடியாகவே தோன்றுகிறது.

படம் 14 ல், ஒரு முப்பட்டைத்துண்டாகச் செதுக்கப்பட்ட பொருளினூடே (Through a material cut into the form of a triangular prism) கதிர் செல்லும்வகை காட்டப்பட்டிருக்கின்றது. ய ர ல வென்பது முப்பட்டையாகச் செதுக்கப்பட்டதோர் பளிங்குத் துண்டினுடைய விளிம்பைக் குறிக்கின்றது. இத்துண்டின் பக்கமொன்றில் ந வென்னும் புள்ளியில் வ த ந வென்னும் கதிர் தாக்குகின்றது. கண்ணாடியினூடே கோட்டக்கதிரின் பாதை ந க நா என்று குறிக்கப்பட்டிருக்கிறது.



படம் 14.

கண்ணாடி வாயுவைக்காட்டிலும் செறிந்தபொருளாதலால், கோட்டக்கதிர் (Refracted Ray) நெட்டுக்கோட்டை அணுகி, துண்டின் அடிப்பாகத்தை நோக்கி மடங்கியிருக்கிறது. ந க நா வென்னும் கதிரானது ர நா ல வென்னும் விளிம்பைச் சேரவே, நா விலுள்ள நெட்டுக்கோட்டைவிட்டு விலகியே நா கா வென்னு மார்க்கமாக வாயுவில் வெளிப்படுகின்றது. எனவே, வ த ம தி யென்னு மார்க்கமாகச் செல்லவேண்டிய கதிர் ம நா கா வென்னு மார்க்கமாக வெளிப்பட்டுச் செல்லுகின்றது. ம வென்னுமிடத்தில் தாக்குக்கதிரின் (Incident Ray) திசையும் வெளிப்படுங் கதிரின் (Emergent Ray) திசையும் சுத்தரிக்கின்றன. முப்பட்டைத்

துண்டின் காரணமாக, தாக்குக்கதிரின் திசை ம தி யிலிருந்து ம நா கா வுக்கு மடங்குகின்றது. ஏற்பட்ட மடக்கம் (deviation) கதிரை முப்பட்டை முனையாகிய (Angle of the prism) ர விலிருந்து விலக்கி, அடிப்பக்கமாகிய (Base of the prism) ய ல வை அணுகிச்செல்லும்படி செய்திருக்கிறது. கா நா வென்னு மார்க்கத்திற் கண்விழியை வைத்துப்பார்த்தால், வஸ்துவானது கா நா நி யென்னும் திசையில் நி யென்னுமிடத்திலிருப்பதுபோலத் தோன்றும். நி யானது வ வினது பொய்நிழலாகும்.



படம் 15.

இதுகாறும் நான்குமூலைத்துண்டுகளிலும் முப்பட்டைத்துண்டுகளிலும் நிகழும் கதிர்க்கோட்டத்தினைக் கூறினோம். இனிக் கதிர்க்கோட்டம் வில்லைகளில் (Lenses) நிகழும்வகையைச் சற்று ஆராய்வோம். படம் 15 ல், பலவித வில்லைகள் வரையப்பட்டுள்ளன. இவற்றுள், i. இருகுழிவில்லை (Bi-concave Lens), ii. இருவிம்முவில்லை (Bi-convex Lens), iii. குழிசமவில்லை (Concavo-plane Lens), iv. சமவிம்முவில்லை (Plano-Convex Lens), v. குழிவிம்முவில்லை (Concavo-Convex-Lens): இவ் வில்லைகளில், இருவிம்முவில்லை (Bi-Convex-Lens), இருகுழிவில்லை (Bi-Concave-Lens) ஆகிய இரண்டினை மட்டுமே இத்தருணம் எடுத்துக்கொள்வோம்.

இருவிம்முவில்லை அல்லது வடிவில்லை (Bi-convex lens or Convergent lens):- ஒரு வெள்ளெழுத்து வில்லையை எடுத்து அதன் முகம் ஒன்றில் சூரியனது வெயில் தாக்கும்படியாகப் பிடித்து, அடுத்த முகத்திற்குப் புறம்பே ஒரு காகிதத்தை வைத்தால் அதன்மீது வட்டவடிவமாகவும் பிரகாசமாகவும் ஒரு நிழல் விழும். காகிதத்திற்கும் வில்லைக்குமுள்ள தூரத்தை ஏற்றவாறு அமைத்துக்கொண்டால், இந்நிழலானது ஒரு புள்ளியாக ஒடுங்கும். இப்புள்ளியில் வில்லையின்மீது தாக்கும் கிரணங்கள் யாவும் ஒருமுனைப்பட்டுச் செறிந்து



படம் 16.

நிற்கின்றன. எனவே, கதிர்களின் செறிவினால் அப்புள்ளியிற் றாக்கும் உஷ்ணம் மிகுந்து காகிதம் எரிந்துபோம். இந்நிகழ்ச்சி பலர்க்கும் அநுபவசித்தமே இது ஏற்படும் வகை படம் 16-ல் காட்டப்பட்டுள்ளது. வி வி யென்னும் வில்லையின்மீது த த வென்னும் தாக்குக்கதிர்கள் (Incident Rays) ஒரு சமகதிர்க்கற்றையாக (Parallel pencil of rays) தாக்கி, க க வென்னும் திசைகளிற் கோடி மு வென்னுமிடத்தில் ஒருமுனைப்படுகின்றன (come to a focus). இந்த மு வென்னும் புள்ளிக்கு வில்லையின் மூலமுனை (Principal Focus) எனப் பெயர். இதற்கும் வில்லைக்கு முள்ள தூரத்திற்கு மூலமுனைத்தூரம் (Focal length) எனப் பெயர். இங்குக்கூறிய நிகழ்ச்சியிற் கவனிக்கவேண்டிய விஷயமொன் றுண்டு. அதாவது, இருவிம்முவில்லை ஒரு கதிர்க்கற்றையைக் கூர்ங்கதிர்க்கற்றை (Convergent beam) ஆக்கவல்லது என்பதே. இவ்வண்ணம் கதிர்களை ஒருமுனையாக வடிக்கும் இயல்பு பற்றியே, இவ்வில்லையை வடிவில்லை (Convergent lens) என வழங்குவார்கள்.

இருகுழிவில்லை அல்லது விரிவில்லை (Bi-concave lens or Divergent lens):-படம் 17, ஒரு இருகுழிவில்லையில் ஏற்படும் கதிர்க்கோட்டத்தினை விளக்குகிறது. த த த த என்னும் கதிர்கள் ஒருதிசைக்கற்றையாக வி வி யென்னும் வில்லையிற் றாக்கி, க க க க வென்னும் கதிர்களாகக் கோட்டம் பெறுகின்றன. கோட்டக் கதிர்கள் (Refracted rays) யாவும் ஒரு விரிகதிர்க்கற்றையாகச் செல்லுகின்றன. படம் 16-ல் உள்ளவாறு இக்கோடக்கதிர்கள் வில்லையின் வலப்பக்கத்தில் ஒருமுனைப்பட இயலாது. ஆனால் இக்கதிர்களின் திசைகளைப் படத்திற்காட்டியவாறு புள்ளிக்கோடுகளிட்டுப் பிற்போக்காக நீட்டினால் அவைகள் வில்லைக்கு இடப்புறத்தில் மு வென்னும் புள்ளியில் ஒருமுனைப்படும். கோட்டக்கதிர்களாகிய க க க க என்பவை இவ்வண்ணம் ஒருமுனைப்படுவது வெறும் தோற்றமேயன்றி,




படம் 17.

படம் 16-ல், உள்ளதுபோல உண்மையன்று. படம் 16-ல் கிடைப்பது உண்மைமுனை (Real Focus) என்றால், படம் 17-ல் ஏற்படுவதைப் போலிமுனை (Virtual Focus) எனக் கொள்ளலாம். மேலும், இரு குழிவில்லையின் இயல்பு, அதில் தாக்கும் கதிர்க்கற்றையை விரிகதிர்க் கற்றையாக (Divergent pencil) மாற்றவல்லது, என்பது விளங்குகின்றது. இக்காரணம்பற்றியே இருகுழிவில்லையை விரிவில்லை (Divergent Lens) என வழங்குவார்கள்.

படங்கள் 18, 19-களில், ஒரு நுண்ணியவஸ்துவின் நிழல்கள் ஏற்படும் வகைகள் காட்டப்பட்டிருக்கின்றன. படம் 18-ல் வ என்னும் புள்ளி வஸ்துவைக் குறிக்கின்றது. வ விலிருந்துசெல்லும் விரிகதிர்க் கற்றை வில்லையைக் கடந்ததும் ஒரு கூர்ங்கதிர்க் கற்றையாகக் கோட்டம்பெற்று, நி யென்னும் புள்ளியில் ஒருமுனைப்படுகின்றது. இப்புள்ளியே வ வினது நிழலாகும். இந்நிழலை ஒரு திரையில் வீழ்த்தலாமாதலின் இது ஒரு மெய்நிழல் (Real Image) ஆகும்.




படம் 18.




படம் 19.

படம் 19-ல், வ விலிருந்து செல்லும் விரிகதிர்க்கற்றை வில்லையைக் கடந்ததும் மேலும் மிகுதியாக விரிந்ததோர் கற்றையாகக் கோட்டம்பெற்று அதன்முனை வில்லைக்கு இடப்பக்கத்தில் நி யென்னுமிடத்திலுள்ளதுபோலத் தோன்றுகிறது. நி என்னுமிடத்தில் ஒரு வெகுசிறிய திரையை (தாக்குக்கதிர்களைத் தடுக்காதவண்ணம்) வைத்தால், அங்கே, படம் 18-ல் உள்ளவாறு நிழல் விழாது; எனவே இருகுழிவில்லையிற்கிடைக்கும்நிழல் பொய்நிழலேயாகும் (Virtual Image). ஆகவே வடிவில்லைக்கும் (Convergent lens) விரிவில்லைக்கும் (Divergent lens) உள்ள குணபேதம், வடிவில்லை தாக்குக்கற்றையை

வடித்து மெய்நிழலளிக்கவல்லது, விரிவில்லை தாக்குக்கற்றையை விரித்துப் பொய்நிழலை யளிக்கவல்லது, என்பதேயாம்.

இனி, மூக்குக்கண்ணாடிகளில் இவ்வில்லைகள் உபயோகப்படுகின்ற விதத்தைக் கவனிப்போம். படம் 20, கண்விழியில் ஒரு வஸ்துவின் காட்சி ஏற்படும்வகையைக் காட்டுகின்றது. கண்விழியில் முக்கிய பாகங்கள், உணர்ச்சிக்குக் காரணமாகிய நரம்புகள் (Nerves) விரவிய விழியி னுட் சுவர்களும், அவ்விழியின் முற்பாகத்தில் இருவிம்முவில்லைவடிவமாக அமைக்கப்பட்டுள்ள ஜவ்வுமே.




பாடம் 20.

வ வ என்று குறிக்கப்பட்ட வஸ்துவிலிருந்து செல்லும் கதிர்கள், வி வி யெனக் குறிக்கப்பட்ட ஜவ்வினைக் கடந்து கோட்டம்பெற்று நி நி யென்னும் நிழலை விழியின் உட்சுவரில் அளிக்கிறது. இந்நிழலின் உணர்ச்சியை நரம்புகள் காட்சியறிவுக்குரிய மூளைப் பகுதிக்குக் கொண்டுபோய்ச்சேர்க்கவே, வஸ்துவின் காட்சி ஏற்படுகின்றது.

நெடும்பார்வை அல்லது வெள்ளெழுத்து (Long sight or Hypermetropia):— மக்களுக்குச் சுமார் நாற்பதுவயதுக்குமேல் வெள்ளெழுத்து என்னும் காட்சிமயக்கம் ஏற்படுவது யாவருக்கும் தெரியும். வெள்ளெழுத்து வந்தவருக்கு மூக்குக்கண்ணாடியில்லாமற் புத்தகம் படிக்கமுடியாது. எழுத்தின் உருவம் தெளிவாகப் புலப்படாது. கண்ணாடியில்லாவிடின் நெடும்பார்வை (Long sight) உற்றவர்கள், கையைநீட்டிப் புத்தகத்தைக் கண்ணிலிருந்து அதிகதூரத்தில் வைத்துப் படிப்பார்கள். அவர்களுக்குக் காகிதத்திலிட்டதோர் சிறுபுள்ளியானது, புள்ளிபோலத் தோன்றாது மையொற்றும் தாளிலிட்டதோர் இங்கித்துளிபோலத் தோன்றும். இதற்குக் காரணம் யாதெனின், கண்விழியினது நீளம் குன்றியிருப்பதேயாகும்.




படம் 21.

படம் 21ல் வ என்னும் புள்ளியிலிருந்து கதிர்கள் ஒரு வெள்ளெழுத்துள்ள (அதாவது நீளம் குன்றிய) விழிக்குட் பிரவேசித்து நி யென்னும்

புள்ளியை நோக்கிச் செல்லுகின்றன. விழியினது உட்சுவர் ந ந வில் இல்லாது நி யிலிருந்தால் வ வினது நிழலாகிய நி யானது உட்சுவரின்மீது கிடைக்கும். வ வென்னும் புள்ளியும் ஒரு தெளிவான நுண்ணிய புள்ளியாக உணரப்பெறும். கண்விழியினது நீளம் குறைந்திருப்பதால் உட்சென்ற கதிர்கள் ஒருமுனைப்படாமல் விழியின் உட்சுவரில் ந ந வென்றதோர் வட்டமான நிழலை அளிக்கின்றன. ஆகவே வ வி லுள்ள நுண்ணிய புள்ளி ஒரு மங்கிய வட்டமான உருவாகத் தோன்றுகிறது. இவ்விதமாக ஏற்படும் உருமயக்கத்தை நீக்கவேண்டின், கதிர்களை விழியின் உட்சுவரில் ஒருமுனைப்படும்படி செய்யவேண்டும்; இது விழியினுட் செல்லும் கதிர்களை நன்கு மடக்கி நெருங்கவைத்தாலன்றி இயலாது. கதிர்களை நெருங்கவைத்தல் வடிவில்லைக்கு (convex lens) இயலும்.



படம் 22.

ஆகவே படம் 22ல் உள்ளவாறு ஒரு வடிவில்லையை விழிக்கு முன்பாக நிறுத்தினால், விழியினுட் செல்லுங் கதிர்கள் படம் 21ல் உள்ளதைக்காட்டிலும் நெருங்கி, விழியின் உட்சுவரில் ஒருமுனைப்படும். இக்காரணம்பற்றியே வடிவில்லைகளை வெள்ளெழுத்துள்ளவர்கள் மூக்குக் கண்ணாடிகளில் உபயோகிக்கிறார்கள்.

மேற்கூறிய நெடும்பார்வை அல்லது வெள்ளெழுத்து, பெரும்பான்மையாக வயது முதிர்ந்தவர்களுக்கு உண்டாகும். இனி, வாலிபர்களுக்கும் வயதுமுதிர்ந்தோர்க்கும் பொதுவாக ஏற்படுகின்ற குறும்பார்வை (short-sight) ஆராயப்படும்.



படம் 23.

குறும்பார்வையுற்ற மாணவன் புத்தகத்தைக் கண்ணுக்கு வெகு சமீபத்தில் வைத்துப் படிப்பான்.



படம் 24.

அவனுக்குக் கரும்பலகையில் ஆசிரியர் வரையும் எழுத்துக்கள் கரும்புள்ளிப்பூச்சி மொய்த்த

வாறு உருமயங்கித் தோன்றும். தூரத்திலுள்ள வஸ்துக்கள் தெளிவாகப் புலப்படா. இதற்குக் காரணம் அவனுடைய கண்விழியானது இயல்புக்கு மிகுந்த நீளமுள்ளதாயிருப்பதேயாகும். படம் 23-ல் வ வென்னும் தூரத்திலுள்ளதோர் நுண்ணியவஸ்துவிலிருந்து செல்லும் கதிர்கள் வழியினுட் பிரவேசித்தபின் அதன் உட்சுவரில் வந்து சேர்வதற்கு முன்பாகவே ஒருமுனைப்பட்டுவிடுகின்றன. இக்குறையை நீக்கவேண்டின், இக்கதிர்களைச் சற்று விரித்து விழியின் உட்சுவரில் ஒருமுனைப்படச்செய்யவேண்டும். இதற்கு விழியின்முன்பாக ஒரு விரிவில்லையை (Divergent lens) மூக்குக்கண்ணாடியாக உபயோகிக்க வேண்டும். (படம் 21.)

## காட்சிக்கருவியியல் (Optical Instruments).

இவ்வியலிற் காட்சிக்குதவியாக அமைக்கப்பட்டுள்ள கருவிகளும் அவற்றை உபயோகிக்கும் முறைகளும் கூறப்படும். காட்சிக்கருவிகளில் முதன்மையானது கண்ணேயாகும். அதனைப்பற்றிக் கதிர்க்கோட்டவியலிற் கூறினோம். ஆனால் நூல்களிற் கண்ணைப்பற்றிக் காட்சிக்கருவியியலிற் கூறுவது வழக்கம். பொதுவாகக் காட்சிக்கருவிகளிற் பூதக்கண்ணாடி (Microscope), தூரதிருஷ்டிக்கண்ணாடி (Telescope), புகைப்படவிளக்கு (Optic lantern), வண்ணக்காட்சிமானி (Spectrometer) ஆகிய இந்நான்குமே முக்கியமானவை. இவற்றின் அமைப்புக்களைச் சற்று விரிப்போம்.

பூதக்கண்ணாடி (Microscope) :— இதனைப்பற்றி கூறுவதற்கு முன், வடிவில்லைகள் (Convex lenses) வஸ்துக்களின் அளவைப் பெருக்கிக்காட்டும் வகையைச் சற்று விளக்குதல் பொருந்தும். சாதாரணமாக நுண்ணிய எழுத்துக்களைப் படிக்க ஒரு இருவிம்முவில்லையை உபயோகிக்கலாம். இதனை எளியபூதக்கண்ணாடி (Simple Microscope) என வழங்குவார்கள். அது வஸ்துக்களின் அளவைப்



படம் 25.

பெருக்கிக் காட்டும் வகை படம் 25ல் வரையப்பட்டுள்ளது. வ வா என்னும் சிறிய வஸ்து வி வி யென்னும் வில்லையின் வழியாக நோக்கப்படுகின்றது. வ விலிருந்து ஒரு விரி கதிர்க் கற்றை புறப்பட்டுச்சென்று வில்லையைக் கடந்து ஒரு விரிகதிர்க் கற்றையாகவே கண்ணில் வந்து சேர்கின்றது. இக்கற்றையிலுள்ள கதிர்களெல்லாம், வில்லையினூடே சென்றபொழுது ஏற்பட்ட கோட்டத்தின் காரணமாக, நி என்னும் புள்ளியிலிருந்து வருவதுபோலக் கண்ணுக்குத் தோன்றும். இதேமாதிரி, வஸ்துவின் மற்றொரு நுனியாகிய வா என்னும் புள்ளியிலிருந்து புறப்படும் கதிர்கள் நீ என்னும் புள்ளியிலிருந்து வருவதுபோலத் தோன்றும். இவ்விதமாகவே வஸ்துவாகிய வ வா வின்மீதுள்ள ஒவ்வொரு புள்ளியின் நிழலையும் ஆராய்ந்தால் அவை ஒவ்வொன்றும் நி நீ என்னும் நேர்கோட்டிலேயே அடங்கும். எனவே நி நீ என்னும் நேர்கோடு வ வா என்னும் கோட்டினது நிழலாகும். இந்நிழலை ஒரு திரையில் வீழ்த்துதற் கியலாது. இது வ வா வினைக்காட்டிலும் பன்மடங்கு பெரிதாகத் தோன்றுதலால், வஸ்துவினது வெகு நுண்ணிய பகுதிகளும், இவ் வில்லையினூடே நோக்கினல் விரிவாகப் புலப்படும்.

சாதாரண பூதக்கண்ணாடியில் (படம் 26) இரண்டு விம்பியவில்லைகளிருக்கின்றன. முதலில் ஒரு வில்லை வஸ்துவின் நிழலைப் பெருக்கியளிக்கிறது. இந்த நிழலை மற்ற வில்லை படம் 25ல் காட்டியவாறு மீண்டும் அளவைப் பெருக்கிக் காட்டுகின்றது. படம் 26ல் கண்ணுக்குச் சமீபத்திலிருக்கும் வில்லைக்குக் கண்வில்லை (Eye-piece) எனப் பெயர்,




படம் 26.

வ வா என்பது ஒரு நுண்ணிய வஸ்துவைக் குறிக்கிறது. வஸ்துவை அணுகிநிற்கும் வில்லைக்கு வஸ்துவில்லை (Objective) எனப் பெயர். வஸ்துவில்லை ஒரு குழாயிலும் கண்வில்லை மற்றொரு குழாயிலும் உறுதியாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குழாய் மற்றொன்றினுட் செருகப்பட்டிருக்கின்றது. குழாய்களை உருவி இருவில்லைகளுக்குமிடையேயுள்ள தூரத்தை வேண்டியவாறு நீட்டியோ குறைத்தோ செய்துகொள்ளலாம். கண்வில்லையின் மூலமுனைத்தூரம் (Focal-length) வஸ்துவில்லையினதைக் காட்டிலும் அதிகமாயிருத்தல்வேண்டும். படம் 26ல், வ வா விலிருந்து கதிர்க்கற்றைகள் சென்று கண்விழியிற் சேரும்விதம் வரையப்பட்டிருக்கிறது. வஸ்துவில்லையிலேற்படும் கதிர்க்கோட்டத்தால் வ வா வினது நிழலானது கண்வில்லைக்கு முன்பாக அளவுப் பெருக்கத்துடன் வி வீ யென்று காட்டியவாறு கிடைக்கின்றது. இது மெய்நிழலேயாகும். இந்நிழலைக் கண்வில்லையானது படம் 25-ன் சம்பந்தமாகக் காட்டியவண்ணம், மிகவும் பெருக்கி நி நீ யென்னும் பொய் நிழலாக அளிக்கின்றது. இந்நிழலானது வ வா என்னும் வஸ்துவை விடப் பன்மடங்கு பெரிதாயிருக்கும். வஸ்துவின் நுட்பங்கள் யாவும் மிக விரிவாகத் தோன்றும். பூதக்கண்ணாடியில் வஸ்துவானது தலைகீழாக இருப்பதுபோலத் தோன்றும். இக்கருவியை உபயோகிக்கும்பொழுது, வஸ்துவானது கருவியை அணுகியிருப்பது அவசியம்.




படம் 27.

தூரதிருஷ்டிக்கண்ணாடி (Telescope):—தூரதிருஷ்டிக்கண்ணாடியின் அமைப்பும் பூதக்கண்ணாடியினதைப்போன்றதே. இதிலும் ஒன்றினுள் மற்றொன்று செருகக்கூடிய இருகுழாய்களும், அவற்றில் இரண்டு வடிவில்லைகளும் உண்டு. பூதக்கண்ணாடியில் மிகுந்த மூலமுனைத்தூரம் (Focal length) உள்ள வில்லையைக் கண்வில்லையாக உபயோகிக்க வேண்டுமெனக் கூறினோம். ஆனால் தூரதிருஷ்டிக்கண்ணாடியிலோ, மிகுந்த மூலமுனைத்தூரம் (Focal length) உள்ள வில்லையை வஸ்து வில்லையாகவும், குறைந்த மூலமுனைத்தூரமுள்ளதைக் கண்வில்லையாகவும் உபயோகிக்கவேண்டும் (படம் 27). எனவே, ஒரு பூதக்கண்ணாடியைத் திருப்பி, அதன் வஸ்துவில்லையைக் கண்வில்லையாகவும், கண்வில்லையை வஸ்துவில்லையாகவும் வைத்துக்கொண்டால் அது தூரதிருஷ்டிக்கண்ணாடியாக உதவும். அதிக தூரத்திலுள்ளதோர் வஸ்துவை, இக்கருவியைக் கண்முன்பாகவைத்து நோக்கினால் அது வெகு சமீபத்தில் பெரிதாகத் தோன்றும். படம் 27ல் வ வா வென்னும் வஸ்துவானது நி நீ என்றவாறு கிடைக்கும்வகை காட்டப்பட்டிருக்கிறது. அதிக மூலமுனைத் தூரம் (Focal length) உள்ள வில்லையானது வஸ்துவை நோக்கி வைக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.




படம். 28.

புகைப்பட விளக்கு (Magic Lantern):-படம் 28 ல் புகைப்பட விளக்கைக்கொண்டு படங்களைத் திரையில் வீழ்த்தும்வகை காட்டப்பட்டிருக்கிறது. ஒரு தகரப்பெட்டியுள் சு என்னும் விளக்கு மிகப்பிரகாசமான சுடருடன் ஆ ஆ என்னும் குழிந்த ஆடிக்கு (Concave Mirror) முன் எரிந்துகொண்டிருக்கிறது. சுடரிலிருந்து கதிர்கள் ஒரு விரிகதிர்க்கற்றை (Divergent Beam) ஆகச்சென்று ஆ ஆ வில் தாக்கி இ இ என்னும் மார்க்கமாக மீண்டு செல்லுகின்றன. வி வி என்பது ஒரு செறிவில்லை (Condensing Lens) உணர்த்தும். இச் செறிவில்லையானது ஒரு இருகுழிவில்லை (Bi concave Lens), இரண்டு சமவிம்முவில்லை (Plano-convex Lenses) ஆகிய மூன்றையும் சேர்த்து ஆக்கப்பட்டதோர் வில்லையமைப்பாகும். இச் செறிவில்லையானது (Condensing Lens) கதிர்களை நன்கு செறித்து, சி யென்னும் படம் தீட்டிய (Slide) சிலேடினூடே செலுத்துகின்றது. இக்கதிர்கள் வீ வீ யென்னும் மற்றொருவில்லையமைப்பினூடே (Focussing Lens, சென்று திரையிற் போய்ச் சேருகின்றன. சிலேடிலுள்ள படத்தில் எங்கெங்கே மைதீட்டப் பெற்றிருக்கிறதோ அங்கங்கே தாக்கிய கதிர்கள் சிதறித் திரைக்கு வந்து சேர இயலாதுபோய்விடும். எனவே சிலேடிலுள்ள கருத்த பாகங்கள் திரையிலுள்ளபடத்திற் கருத்தபாகங்களாகவும், வெள்ளிடையானபாகங்கள் வெள்ளிடையாகவும் ஏற்பட்டு, சிலேடிலுள்ள சிறியபடம் பலரும் தூரத்திலிருந்து பார்க்கத்தக்க பெரியபடமாகத் திரையிற் கிடைக்கும். புகைப்படவிளக்கை ஒரு இருண்ட கூடத்திலேயே வைத்து உபயோகித்தால், படம் தெளிவாக இருக்கும். தற்காலம் புகைப்படவிளக்குகளில்

மின்சாரச்சுடர்களையும் (Electric Arc Lamps) சூரியவெளிச்சத்தையும் உபயோகிக்கிறார்கள். இவற்றிலிருந்து மிகுந்த வெளிச்சமுண்! டாவதால், இத்தகைய புகைப்படவிளக்குகளை உபயோகிக்க இருண்ட அறை வேண்டுவதில்லை.

வண்ணக்காட்சிமானி (Spectrometer):—இதனைப்பற்றிக் கூறுமுன் வண்ணக்காட்சியை (Spectrum) இன்னதென்று விளக்கிக் கொள்ளுதல்வேண்டும். வண்ணக்காட்சியை விளையாட்டுப்பிள்ளைகள் கூடக் கண்டிருப்பார்கள். பலநிறங்கள் பொலிந்த வானவில் ஒரு வண்ணக்காட்சி விசேடமாகும். கண்ணாடித் தீபங்களில் அழகுக்காக முப்பட்டையான பளிங்குத்துண்டுகளைத் தொங்கவிடுகிறார்களன்றே? அத்துண்டுகளி லொன்றை எடுத்துக் கண்முன்னே வைத்துப்பார்த்தால் வஸ்துக்களெல்லாம் வானவில்லுக்குரிய பல அழகிய நிறங்களுடன் தோன்றும். இதிலிருந்து இரண்டுவிஷயங்கள் வெளிப்படும். முதன்மையாக வெள்ளொாளியானது பலநிறங்களுள்ள ஒளிகளின்கலப்பு என்பதும், இரண்டாவதாக, முக்கோணப்பளிங்கு இந்நிறங்களை வெவ்வேறாகப் பிரிக்கவல்லது என்பதுமே.




படம் 29.

இவ்விஷயத்தைப்பற்றி ஆங்கில ஆசிரியான சர் ஐசக் நியூட்டனர் பதினேழாம்நூற்றாண்டில் முதன்முதலாகப் பரிசிலனைசெய்தார். அவர் செய்துகொண்ட கருவியமைப்பு, படம் 29ல் காட்டப்பட்டுள்ளது. பரிசோதனை ஒரு இருட்டறையில் நடைபெற்றது. நியூட்டனர் தமது முப்பட்டைப்பளிங்குத்துண்டை ஒரு மேசையின்மீது வைத்துக்

கொண்டார். அறையின்கதவில் ஒரு நுண்ணிய துவாரம் செய்யப்பட்டிருந்தது. அதன்வழியாக சூரியவெளிச்சத்தைப் படுமட்டமானதோர் (Horizontal) மெல்லியகதிர்க்கற்றையாக அறையினுட்பிரவேசிக்கச்செய்தார். இவ்வெள்ளொளியானது முப்பட்டையைக் கடந்துசென்றது. வெண்கதிர்க்கற்றையிலுள்ள கதிர்களெல்லாம் நிறத்திற்கேற்றவாறு பல்வேறு அளவுகளாகக் கோட்டம்பெற்று, முறைமுறையே சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், அவுரி, ஊதா வுடன் கூடிய வண்ணக்காட்சியைத் திரையின்மீது அளித்தன. பளிங்குத்துண்டை எடுத்துப் பார்க்க, வெள்ளொளிக்கற்றை நேராகச்சென்று திரையின்மீது வெ என்னுமிடத்தில் ஒரு வெண்மையான கறையை அளித்தது. வண்ணக்காட்சியான நீண்ட கறையானது முறையே அமைதிபெற்ற பலநிறங்களுக்குரிய கறைகளின் தொகுதியெனத் தெளிந்தார். மேலும் சிவப்புக் கறை வெ யென்னுமிடத்தை அணுகியும், ஊதாக்கறை வே யிலிருந்து மிகுந்ததூரத்திற் ககன்றும், மற்றக்கறைகள் இவ் விரண்டுதூரங்களுக்கும் இடையே பற்பலதூரங்களில் அமைந்தும் இருந்ததுபற்றி, ஒளியினுடையநிறத்திற் கேற்றவாறு கதிர்மடக்கம் (Deviation) வித்தியாசப் படுகிறதென்பதைத் தெரிந்துகொண்டார்.




படம் 30.

வண்ணக்காட்சிமானி.

மேற்கூறிய அமைப்பில் வண்ணக்காட்சி (Spectrum) தெளிவாகக் கிடைக்காது: வண்ணக்காட்சியினது நுட்பங்கள் வெளிப்படா. ஆதல்பற்றி, ஏற்ற சீர்திருத்தங்களுடன் படம் 29-ல் உள்ளவாறு வண்ணக்காட்சிமானி இயற்றப்பட்டிருக்கின்றது. சூரியகிரணக்கற்றை ஒன்று கி (படம் 30) சமபரப்புக்கண்ணாடி ஆவின்மீது தாக்கி மீண்டு, பி பி யென்னுமோர் பித்தளைத்தகட்டில் வீழ்ந்து அத்தகட்டிலிட்ட து என்னும் மெல்லிய துவாரத்தைப் பிரகாசிக்கச்செய்கின்றது. துவி

விருந்து வெள்ளொளியானது ஒரு விரிகதிர்க்கற்றையாகச் சென்று விவி என்னும் வில்லையைக் கடந்து ஒருதிசைக்கற்றை (parallel beam) ஆகின்றது. இவ் வெண்கற்றையில் இரண்டுகதிர்களேயே யாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வோம். இவ்வெண்கதிர்கள் ஒவ்வொன்றும் மு என்னும் பளிங்குமுப்பட்டையைக் கடந்துசெல்லும்போது பலநிறக் கதிர்களாக, படம் 29-ல் காட்டியவாறு பிரிந்துபோகின்றன. இப் பலநிறக்கதிர்களில் முறையே சி ஊ எனக் குறிப்பிட்ட சிவப்பு, ஊதாக் கதிர்களேயே நோக்குவோம். இரண்டு வெண்கதிர்களிலுமிருந்து பிரிந்த செந்நிறக்கதிர்கள் ஒரு திசையாக முப்பட்டையைவிட்டு வெளியேறிச் சென்று வவ வென்னும் வில்லைக் கடந்து சி என்னும் புள்ளியில் ஒருமுனைப்படுகின்றன. இவ்வண்ணமே, முப்பட்டையிலிருந்து வெளியேறிய ஊதாக்கதிர்களும் ஊ என்னும் புள்ளியில் ஒருமுனைப்படுகின்றன. ஊ, சி ஆகிய முனைகளுக்கிடையே, முப்பட்டையினின்று வெளிப்போந்த மற்றை நிறக்கதிர்கள் முறைமுறையே அ, நீ, ப, ம, ஆ. என்னும் புள்ளிகளில் ஒருமுனைப்படும் படத்தில் எடுத்துக்கொண்ட இரண்டு வெண்கதிர்களேப் போலவே துவாரத்திலிருந்து வெளிப்போந்த பலகோடி வெண்கதிர்களும் பலநிறக் கதிர்களாகப் பிரிக்கப்பெற்று, சிவப்புக்கதிர்கள் யாவும் சி என்னும் புள்ளியிலும், மற்றை ஒவ்வொருநிறக் கதிர்களும் அவ்வவற்றுக்குரிய புள்ளிகளிலும் செறிந்துபோக ஊ....சி யென்னும் வண்ணக்காட்சி ஏற்படுகின்றது. கக வென்னும் இருவிம்முவில்லை படம் 25-ல் காட்டியவாறு இவ்வண்ணக்காட்சியைக் கண்ணுக்கு வேண்டிய அளவுப்பெருக்கத்துடன் அளிக்கின்றது.

இக்கருவியின் உபயோகங்கள் மிகப் பலவாம். இதனைக்கொண்டு யாதானுமோர் ஒளியின் தன்மை இன்னவாறு என ஆராயலாம். சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவற்றிலிருந்து வரும் கதிர்களை ஆராய்ந்து அவ்வுலகங்கள் எப்பொருட்களாலாய வென்பதை அநுமானம் செய்யலாம். ஹீலியம் என்னும் அரிய வாயுவானது சர் வில்லியம் ராம்சே (Sir William Ramsay) என்னும் ஆங்கில சாஸ்திரியால் முதன்முதல் சூரியனுக்குச் சமீபத்திலிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாயு தற்சமயம் பூமியிலும் கிடைக்கின்றது. நட்சத்திரங்கள் முதலியவற்றின் சஞ்சாரங்களை ஆராய்தற்கும் இவ்வண்ணக்

காட்சிமானியை வானசாஸ்திரிகள் ஆப்சர்வேட்டரிகளில் உபயோகிக்கிறார்கள். ஆப்சர்வேட்டரிகள் என்பன பூமியுட்பட்ட அண்டப்பரப்பினில் ஏற்படும் நிகழ்ச்சிகளை இடைவிடாது பல நுண்ணிய கருவிகளைக் கொண்டு கவனித்துக் குறிப்புகள் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிச்சாலைகளாம். இவற்றை, தெள்ளிய ஆகாயமுற்று, புயற்காற்று முதலியவற்றால் இடருண்டாகாத உயர்ந்த மலைச்சிகரங்களில் நிருமிப்பது வழக்கம். அமெரிக்காவிலுள்ள வில்சன் சிகரத்தில் (Mt. Wilson) தாபிக்கப்பெற்ற ஆப்சர்வேட்டரியே கருவியமைப்பின் பெருமைக்காக மிகச்சிறந்தது, எனக் கூறுவார்கள். கோடைக்கானல் மலையிலும் ஒரு பெரிய ஆப்சர்வேட்டரி இருக்கின்றது. இதில் உள்ள இடவசதி மிகவும் உயர்ந்ததெனவே கூறுகிறார்கள். இவ்வுலகில் வானசாஸ்திரபரிசோதனைகளுக்கு இதனைப் போன்ற நல்ல இயற்கையமைப்புள்ள இடங்கள் ஒரு நான்கு அல்லது ஐந்துக்குக் குறைவு என்றே கூறுகிறார்கள். இவ்வளவோடு ஒளியின் முற்பகுதியாகிய கதிர்க்கணிதத்தை (Geometrical optics) நிறுத்தி இனி அலைக்கணிதத்தைப் பற்றி (Physical optics) சிறிது கூறுவோம்.

அலைக்கணிதம் (Physical Optics):—இதற்குரிய ஐந்து இயல்களாகிய ஒளித்தன்மை (Nature of Light), அலைக்கலப்பு (Interference), வளைமடக்கம் (Diffraction), ஒருபான்மைப்பாடு (Polarisation), இரட்டைக்கோட்டம் (Double Refraction) என்பனவற்றுள், முதலாவதைத்தவிர மற்றவை இங்குப் புலப்படுத்தற்குச் சற்று அரியவாகையால், ஒளித்தன்மையியலைமட்டும் சற்றுக் கூறி ஒளியின் விஷயத்தை முடிப்போம்.

[தொடரும்.]

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௩௨௬-ம் பக்கத்தொடர்ச்சி]

## கரன்வதைப்படலம்.

### கரனை இராமன் கொன்றதைக் கூறுவது.

### சூர்ப்பநகை அங்கபங்கமானதைக் கரனுக்கு அறிவித்தல்.

[சூர்ப்பநகை, தன் தந்தை விச்சிரவமுனிக்கும் தாய் கேகசியின் தங்கை கும்பீநசிக்கும் பிறந்தவனும் தனக்காகத் தண்டகாரணியத்திலே சனத்தானத்தில் இராவணன் ஏற்படுத்தியிருந்த இராச்சியத்தின் சேனைத்தலைவனுமான கரனிடம் ஓடிப்போய்க் காலில் விழுந்து கதறி யழுதாள். அவன் "உன்னை இவ்வாறு செய்தவர் யார்" என "இரண்டு மனிதர் எழில்மிகுந்த ஓர் இளம்பெண்ணுடன் இந்த வனத்துக்கு வந்திருக்கின்றார்கள். அந்த இளையாளை இராவணனுக்கென யான் எடுக்க முயன்றபோது, அந்த மனிதர் என்னை இக்கோலங் கண்டார்கள்" என்றாள். அவன் பெருங்கோபங்கொண்டு, அவர்கள் இக்கணமே அழிவார்கள். இப்பழி என்றும் அழியாதே!" என்று கூறிப் போருக் கெழுந்தான். அது கண்ட, அவன்பக்கத்தில் நின்ற பதினான்கு இராக்கதவீரர், "நீ இரண்டு புல்லியமனிதரைக் கொல்லுதற்குச் செல்லுவையானால், தேவர்கள் சிரிப்பார்கள்: எங்களை ஏவுக" என, ஏவினான்.

### அரக்கர் பதினால்வர் வதை.

உடனே அவர்கள் போர்க்கோலம்பூண்டு புறப்படச் சூர்ப்பநகை, எமனிடம் உயிர்களை இட்டுச்செல்லும் எமபடர்போல, முன்படாப் பின்படர்ந்து, அவர்கள் இராமன் இருந்த இடத்தை அடைந்து அவன் உறைந்த சாலையைச் சூழ்ந்துகொண்டார்கள். அவன் சீதையைக் காத்துக்கொள்ளென்று இலக்குமணனுக்குக் கட்டளையிட்டுவிட்டு, வில்லேந்தி வெளிப்போந்து எதிர்த்த இராக்கதர் ஈரெழுவருடைய இருபத்தெட்டுக் கரங்களையும் சரங்களால் அரிந்து தரையில் தள்ளினான். வாள்களோடு தோள்களை யிழந்த அவர்கள், மாறாகத் தாக்குவாராய், மார்புகொண்டு மாள்விப்பேமென்று சொல்லிக்கொண்டுவர, அவன் மீண்டும் சரங்களெய்து அவர்கள் சிரங்களைக் கொய்து தரையில் உருளச்செய்தான்.]

## இராக்கதர் இறந்ததைச் சூர்ப்பநகை கரனுக்குத் தேரிவித்தல்.

380. ஒளிறு வேற்கரற் குற்ற துணர்த்தினள்,
குளிறு கோபவெங் கோளரி மாஅடக்
களிறெ லாம்படக் கைதலை மேல்உறப்
பிளிறி ஓடும் பிடிஅன்ன பெற்றியாள்.

இ-ள். (ஒரு) சிங்கம் கொன்றதனால் (தன்னோடுற்ற) ஆண்யானைக ளெல்லாம் இறந்துவிட (க் கண்டு, துதிக்) கை தலைமேல் உற (வைத்துக் கொண்டு,) வீரிட்டு ஓடுகின்ற பெண்யானையின் தன்மையையுடையவள் (ஆகிச் சூர்ப்பநகை கையைத் தலைமேல் வைத்து, ஐயோ! தெய்வமே! என்று அலறிக்கொண்டு ஓடிப்போய்) நடந்த செய்தியைக் கரனுக்குத் தெரிவித்தாள்.

ஒளிறுதல் - பிரகாசித்தல். உற்றது - நிகழ்ந்த காரியம். குளிறு தல் - ஒலித்தல்; இங்கே கர்ச்சித்தலென்ற பொருள் குறித்தது. கோள் - வலி. அரி - சிங்கம். கோளரியென்றே சிங்கத்துக்கு ஒரு பெயருள்ளது. மா - மிருகம். அடுதல் - கொல்லுதல். களிறு - ஆண் யானை. படுதல் - சாதல். பிளிறல் - ஒலித்தல் - வீரிடல். பிடி - பெண் யானை. பெற்றி - தன்மை. கைத்தலமேலுற என்பதும் பாடம்.

தலைமேற் கைவைத்துப் பிளிறி ஓடல் சூர்ப்பநகைக்கும் பொருந்து தல் காண்க. சிங்கம் இராமனுக்கும் களிறுகள் இராக்கதருக்கும் பிடி சூர்ப்பநகைக்கும் உவமை.

## கரன் சேனைதிரட்டிப் போர்க்குப் புறப்படல்.

[பதினான்கு அரக்கரும் பட்டதைக் கேட்ட கரன், பதினான்கு உலகங்களையும் வெல்லவல்ல பதினான்குபடைத்தலைவர்கள் படைத்த தனது படைத்திரளைப் படைமுரசறைவித்துத் தருவித்து, அந்தச் சேனை சூழத் தேரிலேறிப் போருக்குப் புறப்பட்டான். அந்தக் கருநிற முடைய அரக்கர்சேனை, கருங்கடல்போன்றது. சேனாவீரர்தோள்கள், கடலின் திரைகள் நேர்ந்தன. படைமுரசுமுழக்கம், கடல்முழக்கம் ஒத்தது. அந்தக்கரிய இராக்கத சேனாசமுத்திரம் சூழ்ந்த கரனது பொற்றேர், நாற்புறமும் கருங்கடல் சூழ்ந்த மேரு நேரொன விளங்கியது.

அந்தச் சேனைத் தலைவர்கள், மலைகளென மஞ்சு தவழும் தலைகளை யுடையவர் ; விண்ணை அளக்க மேலோங்குவனபோல மிகவும் உயர்ந்து விடமும் வெளுக்கக் கறுத்த மேனியர்; *செருக்கிடையாது தினவுதின் னும் திண்புயத்தினர். அவர்கள் கானைப் புடைசூழ்ந்து போகச் சூர்ப்ப நகை வழிகாட்டி முன்செல்லப் பின் சென்ற சேனை, இராமன் இருந்த இடத்தை அணுகியது. படைக்கு முன்பாகப் பயந்து பறந்தோடிய பறவைகளும் விலங்குகளும் இராமனுக்குப் படைவரவைத் தெரிவிக்கும் தூதர்போன்றன.

தூசியாலும் ஓசையாலும் சேனை நெருங்குதல் தெரிந்த இலக்கு மணன் போர்க்கோலம் பூண்டு போர்க்குப் புறப்படுவானாக, என்னுமோ வென்று ஏங்கிச் சீதை கண்ணீர் கலுழ்ந்து கலங்கிநிற்க, "இங்கே யிருந்து இவளைக் காப்பாயாக" வென்று இலக்குமணனை நிறுத்திவிட்டு, இராமன், கவசம்தரித்துக் கணைப்புட்டில் தாங்கி, வில்லேந்தி, யானை யைக் கண்டு குகையினின்று வெளிப்படும் சிங்கம்போலச் சேனையைக் கண்டு பன்னசாலையினின்று வெளிப்பட்டான்.

அப்போது, மூங்கிற்காட்டிற் பிறந்து அந்தக்காடு அழிதற்குக் காரணமான தீயேபோல, இராக்கதக்கூட்டத்திற் சனித்து அந்தக்கூட் டம் நாசமாகுதற்கு ஏதுவாகிய தீயாள், "இவனே இராமனென்று," கான்முதலோர்க்குக் கைந்நீட்டிச் சுட்டிக்காட்டினாள். கான் "இத்துணைப் பெருஞ்சேனை கூட்டமாக இவனொருவனை எதிர்த்தல் இகழ்ச்சிக்கிடமானது. யானொருவன் சென்று வென்று கொன்று தின்றுவிடுவேன்" என்று செப்பினான். அப்போது அகம்பனென்ற ஒரு நிமித்திகன், "துன்னிமித்தங்கள் தோன்றுகின்றன. இராமனை எளிய னென எண்ணி இகழற்க" என்று எச்சரித்ததைக் கான் இகழ்ந்து ஏற் றுக்கொண்டானில்லை.

### இராக்கதர்சேனையை இராமன் அழித்தல்.

மின்னுதல்போலக் கோபத்தீ கொப்புளிக்க விழித்து, இடித்தல் போல ஆரவாரித்து, மழைபோல அம்புகளைப் பொழிந்து, கார்மேககாலம் போலக் கரிய இராக்கதசேனை சூழச் சலியாத கருமலைபோல ஒரு மலைவு மின்றி இராமன் நின்றான். அவன், தன்னை வளைத்துக்கொண்ட அரக்

*செரு - போர்.

கரை எதிர்த்து, வில்லை வளைத்து, அம்பு தொடுத்து, அவர்களெல்லாரும் எறிந்த ஆயுதங்களனைத்தையும் அழித்து, அவர்கள் தலைகளை அறுத்து மலைகள்போலக் குவித்தான்].

கவந்தக்காட்சியும் இராமன்அம்பின் வேகமும்.

381 காடு கொண்டகார் உலவைகள் கதழ்எரி கதுவச்
சூடு கொண்டன எனத்தொடர் குருதிமீத் தோன்ற,
ஆடு கின்றன அறுதுறை அயில் அம்பு, விண்மேல்
ஓடு கின்றன, உயிரையும் தொடர்வன ஒத்த.

இ-ள். காட்டை யிடமாகக்கொண்ட பெரியமரங்களின் பொந்துகள் (உள்ளே) தீப்பற்றியதனால், சுவாலை (மேலாக வெளிப்படக்) கொண்டனபோல (த் தலை அறுபட்ட உடற்குறையான) கவந்தங்கள் (அறுப்புண்ட கழுத்தினின்று வெளிப்படும்) இரத்தம் மேலே தோன்ற, (அந்தக் காடாகிய போர்க்களத்திலே துடித்து) ஆடலுற்றன. (இராமன்) அம்புகள் (இராக்கதவீரர் உடல்களை அறுத்துவிட்டு) விண்மிசையே விசையோடு செல்வன, (அவ்வீரர் உடல்களை ஒழித்தமையோ டமையாமல் வீரசொர்க்கத்துக்குச் செல்லும் அவர்கள்) உயிரையும் (அழிக்கத்) தொடர்வன ஒத்தன.

காடு-வனம்; நெருக்கம்; மிகுதி. காடுகொண்ட என்பதற்கு நெருக்கமான அல்லது மிகுதியான வென்றும் பொருள் கொள்ளலாம். கார்-கருமை; பெருமை. உலவை-மரப்பொந்து; மரக்கிளை. கரிய பெரிய மரப்பொந்துகள் அல்லது மரக்கிளைகள் கரிய பெரிய அரக்கருடல்களுக் கொப்பு. கதழ்தல்-உக்கிரமாதல்; மிகுதல்; விரைதல். சூடு-வெப்பம்; ஆகுபெயராய்ச் சுவாலையை உணர்த்தியது. 'சூடுகொள்ளல்' அதன் முதிர்ச்சியாகிய எரிதலெனலுமாம். 'சூடு' என்பதற்குத் 'தலை' என்றும் ஒரு பொருளுண்மையால், சூடு எரி கதுவக் கொண்டன என இயைத்துத் தலையில் (—உச்சியில்) தீப்பற்றப்பெற்றன என்றும் பொருள்கொள்ளலாம். தொடர்தல் — இடைபறாதுவரல் — வழிதல். மீ—மேல். அறுகுறை—கவந்தம். ஆடுதல்—துடித்து அசைதல். அயில்—கூர்மை. ஒத்த — (அன்சாரியை பெறாத) ஒத்தன. காபெரிகதுவ என்பதும் பாடம்.

உச்சியில் பொந்து உள்ள மரம், கழுத் தறுபட்டுச் சுவாசக் குழலின் துவாரம் தோன்ற உள்ள உடலுக்கும், சுவாலை மேலெழுதல், இரத்தம் வெளிப்படலுக்கும் உவமை. போரில் இறந்தவர் வீரசொர்க்கம் புகுவரென்னும் ஐதிகம்பற்றி 'அயிலம்பு விண்மேல்—ஓடுகின்றன உயிரையுந் தொடர்வன ஒத்த' என, மிக்க இறும்பூதும் இன்பமும் விளையக் கூறினர்.

இராமன் அம்புகளின் விசித்திர வேலை.

382. மாரி ஆக்கிய வடிக்கணை வரைபுரை நிருதர்
பேரி யாக்கையின் பெருங்கரை வயின்தொறும் பிறங்க
ஏரி ஆக்கின; யாறுகள் இயற்றின; நிறையச்
சோரி ஆக்கின; போக்கின வனமெனும் தொன்மை.

இ-ள். (இராமன்) அம்புகள், மலைபோன்ற இராக்கதர் உடம்புகளால் ஆன பெருங்கரைகள் (போர்க்களமாக்கப்பட்ட காட்டின்) இடங்களெல்லாம் உயர்ந்து விளங்க, (அந்தக் கரைகளின் உள்ளே) ஏரிகளுண்டாக்கின; (அன்றி,) ஆறுகளும் உண்டாக்கின; (அப்படி உண்டாக்கிய கரைகளுக்கு இடையில் உள்ள வெற்றிடங்களான ஏரிகளிலும் யாறுகளிலும்) நிறைய இரத்தநீர் (பெருகச்) செய்தன; (இவ்வாறாகப் போர் நிகழ்ந்த வனம் முழுவதும் இரத்த ஏறிகளும் யாறுகளுமாகச் செய்து) வனமென்ற பழைய நிலைமையை நீக்கிவிட்டன.

மாரி—மழை. ஆக்கிய—செய்த. ஆக்கிய என்பது எதுகைத்தானத்தில் நிற்றல்பற்றி உவமைப்பொருள் பயப்பதாயிற்று. மாரி ஆக்கிய—மழைபோன்ற — மிகுதியாலும் நெருக்கத்தாலும் மழைபொழிதல் போன்ற தோற்றத்தை உண்டாக்கிய. வடி—கூர்மை. கணை—அம்பு. வரை—மலை. புரை-ஒத்த. பேர்-பெருமை. கருமை கார் என்பன ஒருபொருள் குறித்தல்போலப் பெருமை பேர் என்பவை ஒருபொருள்குறித்தவை. யாக்கை — உடம்பு. சந்தியால், பேர்யாக்கை, பேரியாக்கையாயினது. வயின் — இடம். பிறங்கல் — உயர்தல்; விளங்கல். சோரி — இரத்தம். தொன்மை — பழமை — பழையநிலைமை.

ஏரிகளையும் யாறுகளையும் ஆக்குதற் கேற்ப, இராமனம்புகளை 'மாரியாக்கிய வடிக்கணை' என்றார். இரத்தம் படிந்து சிவந்த வெண்சாமரங்களும் வெண்கொற்றக்குடைகளும் செந்நீர் நுரையும் குமிழியுமாக,

மிதந்துசெல்லும் யானைகள் வன்மீன்களாகச், சேணங்கள் தோணிக ளாகக் கொண்ட அந்த இரத்தயாறு ஓடுதல், சிவந்த புதுப்புனல் வெள்ள முடைய ஆற்றோட்டம்போன்றது.

[போர்க்களமான அந்த மரக்காடு அரக்கர் பிணக்காடாக, அவ் அரக் கர் உயிர் நீங்கிய உடற்சுமையால் மண்மகள் முது கொடிந்தாள்: அவர் கள் உடல் நீங்கிய உயிர்ச்சுமையால் விண்மகள் முது குளுக்கினாள்:

*குளவி புழுக்களைக் கூட்டிற் சேர்த்துத் தன்வடிவமாக்குதல்போல, இராமன் இராக்கதரை விண்ணிற் சேர்த்து இமையவராக்கினான்.

அப்படி அமரராக்கப்பெற்ற அரக்கர், தாம் அரக்கராயிருந்ததை மறந்து, தம்மவர் சமர்க்களத்திற் சாதலைக் கண்டு, மற்றைத் தேவரோடு சேர்ந்து, அவர்போலத் தாமும் சந்தோடங்கொண்டு, 'அரக்கர் அழிந் தார்! அரக்காழிந்தார்!' என்று ஆரவாரித்தார்கள்.

அவர்கள், முப்புரத் தசுரர் எப்புறமும் சுற்றிய ஈசன்போல எண் ணிறந்த இராக்கதர் எப்பக்கத்தும் சுற்றப்பெற்ற இராமன் ஏகனாயிருக் கின்றானேயென்று, அவன் தனிமை கருதி அமரர் அஞ்சுதல்போலத் தாமும் அஞ்சினார்.

அவர்களுள்ளே சிலர் தம் தேவமனைவியரோடு விண்ணில் நின்று போர்க்களக்காட்சி பார்க்கப் போந்தவர், தமது உடற்குறை துடித் தாடும் கவந்தநாடகத்தைக் கண்டு களிப்பாரும் தமது தோளைப் பே யொருபக்கமும் நாயொரு பக்கமும் கௌவியிழுக்கக் கண்டு சிரிப்பாரு மாயினர்.

தங்கள் தானை அழிந்தமைகண்டு தாக்கிய பதினான்கு படைத் தலைவர்களுடைய விற்களை இராமன் அம்புகளால் அறுத்து வீழ்த்தி விட, அவர்கள் மலைகள்கொண்டு மலைய, அவன் மீண்டும் அம்புகள் விட்டு அந்த மலைகளையும் அவர்கள் தலைகளையும் வீழ்த்தினான்.]

(தொடரும்.)

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* இது புராணச் செய்தி. உண்மையிற் குளவிகளும் மற்றைப் பூச்சிகளும் பிறக்கும்போது முட்டைகளாய்ப் பிறந்து பின்பு புழுக்களாகி, முடிவில் தம்மை முட்டைகளாக ஈன்ற பூச்சிவடிவம் அடைகின்றன.

## இராமநாதபுரம் ஸமஸ்தானம்

## மஹாராஜராஜஸ்ரீ மாட்சிமைதங்கிய

## ஸ்ரீராஜராஜேஸ்வரஸேதுபதி மஹாராஜா அவர்கள்

## தேகவியோகமடைந்தமைக்கு ஆற்றாது

## வித்வான்கள் பாடிய

# சரமகவிகள்.

### மஹாமஹோபாத்யாயர்:

### ப்ரும்மஸ்ரீ: வே. சாமிநாத ஐயர் அவர்கள்

பாடியவை.

ஒப்பொன்று மிலதாகி யுயர்செல்வத் தவர்க்குளவாந்
தப்பொன்று மிலனாகித் தனையடுத்த வறிஞர்களுக்
கெய்ப்பொன்று மிலதாச்செ யிராசரா சப்பெயர்கொள்
துப்பொன்று மரசுபுவி துறந்ததுயர் சொலற்பாற்றே. (1)

காட்சியினாற் பவந்தொலைக்குங் கவின்சேது நாட்டினர
சாட்சியன்சீர்ப் பாற்கரவே ளருந்தவத்தா னுதித்தபெரு
மாட்சியுறு புகழ்ராச ராசமகி பாலவிசைப்
*பூட்சியைநன் றெனமதித்தோ பூதவுடல் நீத்தனையே. (2)

பொதுநோக்கந் தவிர்தியெனப் புகழ்க்கபிலன் சொலக்கேட்டே
யதுநோக்கு †மலையனிவ னாமென்றே யிருந்தவெனைச்
செதுநோக்க ரிடைநிறுவிச் சேர்ந்தனைபொன் னுலகென்னோ
முதுநோக்க முறுராச ராசேச மொழிகுவையே. (3)

காகமெலாங் குயிலாகக் காண்கலியி னீவிண்ணம்
போகல்புரிந் தனையடுத்தோர் புன்கணுற லறிந்திலையே
பாகமொரு பெண்ணுடைய பரம்பொருளை நினைந்துருகும்
எகமுறு மனமுடைய விராசரா சேந்திரனே. (4)

---

* பூட்சி - உடம்பு.

† மலையன் - மலையமான் திருமுடிக்காரி.

பன்னுறுசெந் தமிழ்ச்சுவையைப் பகர்ந்துமகிழ் வித்திடுநீ
துன்னுறுவிண் ணகஞ்செலினச் சுவையினையான் கேட்பதெவன்
மன்னுறுமச் சுவையினையான் வகுத்துரைக்கு மிடம்யாதோ
என்னுறுகண் தீர்த்தளித்த விராசரா சேந்திரனே. (5)

என்னதுய ருளத்தினிடை யிருந்திடினு நினைக்கண்டா
லன்னதுவிண் டகலமிக வகமகிழ்வ மினியெங்க
ளின்னலினை யறிபவரா ரிராசரா சேந்திரனே
பன்னரிய விசைக்கனியே பார்வேந்தர் நாயகமே. (6)

விருப்பமகன் றவர்களுமே விரும்புறநீ வீற்றிருந்திட்
டுருப்பமறத் தமிழ்விருந்தை யூட்டிடுதல் மறப்புறுமோ
திருப்புகழா தியவற்றைத் திப்பியநல் லிசையுடன்சொற்
றிருப்புளமுங் குழைவிக்கு மிராசரா சேந்திரனே. (7)

தங்குவளக் கைலையிடஞ் சார்ந்தனையோ செங்கரத்திற்
சங்குடைய செங்கணவன் றனதுலகு சார்ந்தனையோ
கொங்குமிகு கடம்பணியுங் குகனுலகு சார்ந்தனையோ
எங்குகடந் தனைநவிறி யிராசரா சேந்திரனே. (8)

பால்வேண்டும் பழம்வேண்டும் பணம்வேண்டும் பலவுடுப்பு
மேல்வேண்டுங் கோல்வேண்டும் விரைசகட மிகவேண்டும்
*ஆல்வேண்டு மெனலன்றி யரசேநின் போற்றமிழ்த்தொன்
னூல்வேண்டு மெனவன்பி னுவல்பவரைக் கண்டிலமே. (9)

சுரையில்புகழ் மிதுசேது காவலவ னொருசிறிதும்
புரையில்குண முறுராஜச ராசபுர வலன்றனையித்
தரையிலிருந் தகற்றிடச்செய் தறுகண்மை யுடைக்கலியின்
வரையில்பெருங் கொடுமையினி மாறவரு ளிறையவனே. (10)

அளிமேவு மாசேநீ யாற்றுதவத் தானுதித்த
நளிமேவு குணநாக நாதனெனுங் குலக்கொழுந்திற்
கொளிமேவு நினதாசை யுதவியரு ளொழித்திடுநின்
களிமேவு விறலதனைக் கடலுலகு புகழ்ந்திடுமே. (11)

---

* ஆல் - ஹால் (Hall).

## இராமநாதபுரம் ஸமஸ்தானம்
## மஹாவித்வான்: ரா. இராகவையங்கார் அவர்கள்

பாடியவை.

மண்ணியனு டனைத்தினிலும் வந்தவர்பா வங்கழுவும்
புண்ணியநா டெனுஞ் சேதுப் பொருவில்தமிழ்த் திருநாடு
நண்ணியநீள் தவமனைய ராஜரா சேச்வரனே
விண்ணியனு டாளவுநீ விரும்பினையோ சென்றனையால். (1)

இமிழ்சுடர்வான் புலவரெலா மிருந்தனரென் றேகினையோ
அமிழ்தலது நீமாந்து மருந்தமிழ மாங்குளதோ
தமிழொழிந்த தனிவிசும்பு தலைமகிழ்ச்சி தாவலதோ
உமிழ்கதிர்வா னிரவிகுலத் தொருராச ராசமன்னே. (2)

தாயலறத் தம்பியழத் தங்கையழச் சிற்றப்பன்
கூபலறக் குலமகளிர் குழைந்தலறச் சிறுவருடன்
சேயலற நீவானிற் சிறப்பயர்தல் வழக்கன்றால்
ஞாயிறலர் குலமுதலே ராசரா சேச்வரனே. (3)

தாயிருக்க நினைப்பிரித்த தகவில்லாக் கொடுங்கூற்றங்
காயுதிர்த்துக் கனியிருக்கக் கண்டதுவான் மற்றதனை
நீயெதிர்த்து வழக்குரைக்க நினையாத தென்னைகொலோ
சேய்மதித்த திறல்படைத்த திருராச ராசமன்னே. (4)

நீகடனைத் தீர்த்தெவர்க்கு நெறிநின்று முறைசெய்து
சேய்கடனை நீபெற்றுச் சேணுடு சென்றகன்றாய்
தாய்கடனைத் தீர்க்காது தணப்பதுதான் வழக்காமோ
தோய்கடலிற் றிகழ்சேதுத் துறைராச ராசமன்னே. (5)

உடுவனைய பலராச ருலகத்தி லுளரேனும்
வடுவரிய மதியாகு மன்னுநின் மானுவரோ
நடுவனையே நோவேனுல் ராசரா சேச்வரனே
கொடுவுலக மாக்கினனுற் குளிர்மதியைத் துடைத்ததனுல். (6)

காரோடு பொருகொடைப்பாற் கரன்மகனு யவதரித்து
நீரோடு நிலனெல்லா நெறிமுறைசெய் திருந்தருணீ

யாரோடு நுணுக்கமெலா மினிதுரைக்க வேகினையோ
யாரோடு மெமைப்புரந்த ராசரா சேச்வரனே. (7)

பானில்லாப் பெருவானு மினிதாங்கொ லென்னோடு
தேனெல்லாம் பெய்தாற்போற் சிலசொல்லக் காமுறுநீ
ஏனெல்லை யிகந்தென்னை யிவண்விடுத்துப் போயினையால்
நானெல்லே னின்பிரிவை ராசரா சேச்வரனே. (8)

நீபடைத்த வளனெல்லா நினைத்தளத்த லரிதேவெல்
வாய்படைத்து மதியடைத்து மயங்காத மனம்படைத்துச்
சேய்படைத்துப் புகழ்படைத்துத் திறல்படைத்து நெடிதாயு
ளேபடைக்கா திருந்தனையே யிராசரா சேச்வரனே. (9)

கல்லாத வெறுநாளுங் கவிபொதிந்த நுணுக்கமெலாஞ்
சொல்லாத சிறுநாளுந் தொடைவிடையாற் புலவாதம்
வெல்லாத வறுநாளும் வேந்தநின்பாற் கண்டிலனால்
எல்லாரும் புகழ்மதிகூ ரிராசரா சேச்வரனே. (10)

பாட்டருமை கண்டுவந்து பாராட்டும் பெருமதிப்புங்
கேட்டருமைப் படவிசைக்குங் கிளரினிய குாலமிழ்தும்
வேட்டருமைப் படமொழியும் விறல்வாத வென்றியுமிந்
நாட்டருமை யாயினவே ராசரா சேச்வரனே. (11)

மதியினுக்குக் கட்டளைக்கல் வாதத்துக் குரையாணி
துதியினுக்குப் பெருநிலயஞ் சூழ்ந்தார்க்கு வாழ்ந்ததுணை
நிதியினுக்குத் தனதனெனு நீள்ராச ராசவெந்தப்
பதியினுக்கு ளொளித்தனையோ படரினுக்கு ளெமைவிடுத்தே. (12)

புல்லாணி வழிதிருத்திப் புனல்வைவைப் பாலமிட்டுச்
செல்லாத கானெல்லாஞ் சென்னெறியைத் திருத்திவைத்திங்
கெல்லாரு மினிதுதங்கு மிடங்கட்டி நீயொருவன்
இல்லாமற் போவதுவோ விராசரா சேச்வரனே. (13)

அரியதலைக் காவிரியி லணைவோரு மினிதுதங்கப்
பெரியதிருச் சத்திரமும் பிறங்கவைத்து நீயொருவன்
உரியவதிற் றங்காம லொளித்தனையா னின்பிரிவோ
எரியினிற்சென் றடுவதரோ விராசரா சேச்வரனே. (14)

அரசருளே யறிவினையென் பதுநினக்குச் சிறப்பன்று
பரசியநல் லறிவருளே யறிவனுநீ பல்காலுங்
குரிசிலுனைத் தெரிந்தபெருங் குலமக்கள் துணிபிதுவால்
நரபதியுட் சேதுபதி ராசரா சேச்வரனே. (15)

மரந்தெரிந்த கற்பகமும் மதிதெரிந்து வழங்கவிலை
திரந்தெரிந்த கருமுகிலுஞ் சிறப்பறிந்து பெய்வதிலை
உரந்தெரிந்த புகழுடைய வொருராச ராசநின்போற்
றரந்தெரிந்து புலவரையே தலையளிக்க வல்லார்யார். (16)

கோனோக்கு பெருஞ்சபையிற் குலமக்கள் களிறாக
நீநோக்கு சிங்கமென நெடியபெரு மிதத்திருத்தல்
தானோக்கி மகிழ்கண்கள் தவித்தழுது புல்லென்ன
வானோக்கிப் போயினையே மதிராச ராசமன்னே. (17)

மணப்பவனி முடிசூடி வருபவனி நவநிசியிற்
கணப்பவனி களிறாருங் கடற்பவனி கண்டகண்ணாற்
பிணப்பவனி காண்பதற்கோ பெருநாள்கள் பெற்றேனின்
தணப்பவனி தாங்கரிதே தனிராச ராசமன்னே. (18)

இந்நாட்டு நீதலைமை யெய்தாத வவையுளதோ
தென்னாட்டுத் தலைமையுனைச் சேராத நாளுமுண்டோ
பொன்னாட்டிற் போயிருந்தும் புனைதலைமை நினதேயால்
எந்நாட்டு மிசைபரந்த விராசரா சேச்வரனே. (19)

சீராம நாதர்பணி திருக்குடந்தைத் தேவர்பணி
தாராரு மணிமார்ப தமிழ்ச்சங்கப் பெரியபணி
பாரோர்த முளமுவப்பப் பண்ணியதை மறப்பேமோ
ஏராரும் பெருமதிசே கிராசரா சேச்வரனே. (20)

தமிழ்த்தேயச் சருவகலா சாலையவைத் தலைமைநினக்
கமைத்தேயு மிருந்தபடி யகிலவுல கறிந்ததனைச்
சமைத்தாங்கு பாராமற் றணப்பதுதான் முறையாமோ
எமைத்தேர்ந்த பெருந்துணையே யிராசரா சேச்வரனே. (21)

எத்தனைதான் சொற்றாலு மிராசரா சேச்வரநின்
முத்தனைய திருமுறுவன் முகங்காண வல்லேமோ

இத்தனையு முளம்பிரியா திருந்தனைநீ யென்றாலுஞ்
செத்தனையென் றெணுந்தோறுந் தேகமெலா நடுங்குமரோ. (22)

குற்றால மனைபடைத்துக் குளிர்பொதியக் காப்படைத்துக்
கற்றார்கள் குழுவோடு கலந்தமர்ந்து களிக்காம
லுற்றார்க ளினைந்தலற வொருநீயும் பிரிவதுவோ
எற்றாலு மெமக்கினிய விராசரா சேச்வரனே. (23)

பொய்கொண்டு புகுவார்தம் புலைநெஞ்சை யடியகழ்ந்து
கைகண்ட நெல்லியினிற் கருத்தெல்லாம் வெளிப்படுத்து
மெய்கொண்டு வெல்கின்ற விளையாட்டு மெங்கேயோ
செய்கொண்ட வளச்செம்பித் திருராச ராசமன்னே. (24)

மன்னு விபவ வருடத்தி லாடிமதி
முன்னபர பக்கத்து மூன்றுதிதி—துன்னுவெள்ளி
மாராச ராசேச் வரசேது காவலவன்
சீரார்விண் மேய தினம். (25)

---

சென்னை யூனிவர்ஸிடி தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்
தலைமைப்பண்டிதர் இராமநாதபுரம்
மு. இராகவையங்காரவர்கள் பாடியவை.

தண்டமிழா மணங்குதனைத் தாங்குமொரு தலைவனின்றித் தளர்ந்த காலை
மண்டுதுய ரிருளகல வந்தருள்பாற் கரன்பினுவா மதியிற் றோன்றும்
எண்டகுசீர்ச் சேதுபதி [1]யிராசரா சேசவள்ளா லிந்நா ளுன்னைக்
கண்டிலமால் யாங்கொளித்தாய் காசினியி னிலையிதுவோ காணுங் காலே.

உலகவியன் முழுதுமுணர்ந் தொழுகியபே ரறிவாள வோங்கு மன்னர்
திலகமனுய் ராசரா சேச்சுரநீ செல்காலமீதோ சொல்லாய்
குலகுமா ரினைந்தேங்கக் கோமகளிர் தாமரற்றக் குலவர் கூவ
அலகில்துய ருறுமருமை யன்னையர்தம் முதுமைகண்டு மகல வம்மா.

---

[1] ராஜராஜேசன் என்பது சந்திரனாகிய அரசர்தலைவன் என்ற பொருளையும் குறிப்பினுணர்த்தி, சூரியன் மறைவையும் சந்திரன் தோற்றத்தையும் மாறி மாறிக்காணும் உலகத்தினியல்பு புலப்படநிற்றல் காண்க. (ராஜன்—சந்திரன்).

புலம்புரியும் பேரவைகள் புலம்பினநா யகமிழந்து புனித சேது
நிலம்புரிந்து தாங்கியதன் னிருபனையின் றிழந்திரங்கா நின்ற தன்பர்
குலம்புலம்பற் களவுண்டோ குறுகாரும் மதியாற்றற் குருகா ரில்லை
வலம்புரிபோற்சேதுகுலம்வருெம்பெருமான்பெரும்பிரிவால்வருந்திமன்னோ.

புலமையாற் பெரியாரைப் புந்தியா லளந்தவரைப் போற்ற வல்ல
குலமையார் கொடைவேந்த னீயன்றி யாவருளர் குறிக்கொண் டியானும்
நிலைமையா ரச்செய்த நெடுந்தகாய் நின்பிரிவுன் னன்பு மிக்க
தலைமையார் புலவரையென் படுத்தாது பலபுலம்பத் தமிழ்க்கோ மானே.

அருமையறியாக்காலத்தழைத்தறிஞர்தமைப்பேணியணைத்தகையைப்
பெருமையறியாதமன்பிரித்தனன்காண்புண்ணிடைக்கோல்பெய்தாற்போலத்
திருமதுரைத்தமிழ்ச்சங்கந்தென்னர்பிரானென்னவுறுஞ்சேதுவேந்தன்
றருமதுரைதலைமையினும்பொலிவையிழந்ததுவென்னோதமிழ்செய்பாவம்

மதிபுக்க திருமுகத்தான் மகிழ்ந்தேற்கு முபசரிப்பும் மதுர வாக்கால்
எதிபுக்க பாடல்பல வின்னிசையிற் பன்னழகு மேற்பக் கூறுந்
துதிபுக்க சொன்னயமுஞ் சூழ்திறமும் ஆழ்மதியுந் தோன்று லென்றும்
பதிபுக்குன் பாற்காண்பேன் விதிபுக்கவா வில்லு பாரா வாறே.

பண்டுற்றநின்குடியுட் பழம்பெருமைக் குடிப்பிறந்த பண்பு நோக்கி
அண்டுற்ற வெமக்கெனநீ யன்புற்றுப் புரிந்தனவு மருளற் கெண்ணிக்
கொண்டுற்ற பேரளியுங் குறிக்கொண்டு நினைதோறுங் கோவே தீவாய்
கண்டுற்ற மெழுகென்னக் கரையுமென துளஞ்சேது காவ லோனே.

தானக்கோப் பாற்கானூர் தவப்பயனே தரியலரை யிரியல் கண்ட,
கானக்கோ ளரியனையாய் காவலருன் போலினியுங் காண்ப துண்டோ
ஏனக்கோட் டிடைநின்றிவ் விருநிலமா தன்றடைந்த வெழுச்சி போலுன்
ஞானக்கோட் டிடைச்சேது நாடுநின்று பெற்றவெழில் நாங்கண் டோமே.

மூதறிவால் யாதனையு முன்னறிந்து கணிக்கவலாய் முகவை வேந்தே
தீதகலுன் னாட்டுரிமைத் திருமகனுக் கௌருநாமந் தெரிந்து [1]நாக
நாதனென வாதியினீ நாட்டிபதுங் குறைவுறுமோ ஞானச் சீரும்
பூதலமார் தோள்வலியும் புகழ்பெறவுன் கோமகன்பாற் றிகழு மன்றே.

---

[1]நாகநாதன் என்பது ஆதிசேடன் என்ற பொருள்பயத்தலின் இவ்வாறு சிறப்பிக்கப்பெற்றது.

தென்முகவா புரித்தோன்றிச் சீர்க்கதிர்கொள் பாற்கரன்பின் திகழு மன்னேன்
மன்மகவாய் வந்தளித்த [1]மாமதியோன் பிரிந்ததுயர் மாறு தேனும்
நன்மாபாஞ் சேதுகுல நடுக்கடல்வந் துயர்[2]நாக நாத னாகிப்
பன்முகமா யொளிபாப்பும் பாற்கரோ தயங்கண்டோம் பயம்மண்டோமே.

சிதம்பரம் ஸ்ரீமீநாக்ஷிகாலேஜ் தமிழாசிரியரும்,
ஸேதுஸம்ஸ்தான வித்வத்பரம்பரையினருமான
சர்க்கரை—இராமசாமிப்புலவர் அவர்கள்

பாடியவை.

புவிவேந்தர் மணிமகுடம் புனைகழலாய் தனுக்கோடி புரக்குங் கோவே
கவிவேந்தர் கலியகலக் கனகமழை பொழியுமிரு கையு ளோய்கட்
செவிவேந்தன் பிலத்தொளிக்கச் செந்தமிழா தியகலையிற் சிறந்தாய் செல்வச்
சிவிவேந்த னனையமுத்து ராமலிங்கேந் திரசுவர்க்கஞ் சேர்ந்திட் டாயோ. (1)

கற்றவருக் கிருநிதியே காவலர்சி காமணியே கடல்சூழ் வைப்பில்
உற்றவர்க்கு நற்றுணையே யுயர்சென்னைச் சட்டசபைக் குரிமை பூண்டோர்
மற்றெவர்க்கு மாறுயிராய் மன்னுமுத்து ராமலிங்க வள்ள லேறே
பற்றலரு நின்பிரிவாற் பரிதவிப்பி னன்பர்துயர் பகரற் பாற்றோ. (2)

ஊரிரங்க மனைவிமக்க ளுறவின்முறை யாரிரங்க வுன்னைப் பெற்ற
பேரிரங்கக் கவர்னர்முதற் பிரபலமாந் தருமிரங்கப் பிழையி லாவிப்
பாரிரங்க நாவலர்கள் பதைத்திரங்கப் பரமசிவன் பதமுற் றாயோ
காரிரங்குங் காதலத்தா யெங்கள்துய ரகலும்வகை கழறு வாயே. (3)

சங்கீத சாகரமே தமிழறியும் பெருமாளே தால மெங்கும்
மங்காத புகழ்த்தந்தை பாற்கரபூ மான்மகனே வருகென் றுனே
சிங்கார மாளிகையிற் சிறந்துளபாண் டித்துரைதா தினைவிட் டானே
எங்கேகி யுளைமுத்து ராமலிங்க வேந்தேநீ யிசைத்தி டாயே. (4)

தனம்படைத்தா ருலகிலுண்டு சமஸ்தானா திபதியெனத் தாலம் போற்றும்
கனம்படைத்தா ருலகிலுண்டு கருதலரைப் புறங்காணுங் களிறு பாய்மாச்
சினம்படைத்தா ருலகினிலுண் டுனைப்போலப் புலவருக்குச் சிறப்பு செய்யும்
மனம்படைத்தா ருளரோசொல் வாய்முத்து ராமலிங்க வள்ள லேறே. (5)

[1]மாமதியோன் என்பது பூர்ணசந்திரனென்றும், பேரறிவுள்ளவன் என்றும் பொருள்பயக்கும். [2]ஈண்டு நாகநாதன் என்பது, விண்ணிடத்துக்குத் தலைவனென்பதையும் ஷண்முகன் என்பதனையும் பன்முகமாயென்பது புலப்படுத்தல் காண்க.

சீலமிகு ரகுநாத சேதுபதி மகிழ்ந்துபொன்னிற் செய்த நெட்டி
மாலைதந்தச் சிவிகைவைகை வளநாட்டி லூர்மகமை வழங்கு மந்தக்
காலமுத லெமையளித்துக் காக்குமுத்து ராமலிங்கக் கருணைக் குன்றே
தாலமெலாம் புலம்பவிட்டுப் பிரிவதுனக் கழகாமோ சாற்று வாயே. (6)

திங்களெனுந் தண்குடையாய் செம்பிவள நாடுடையாய் தேவை மேவு
கங்கையணி கறைமிடற்றி ராமநா தக்கடவுள் கழலே யென்றுந்
தங்குதிரு வுளமுடைய ராசரா சேசுவரச் சாமீ நின்சேய்
எங்குமிசை நிறுத்துசெங்கோ லேந்திமனச் சாந்தியும்பெற் றிடச்செய் வாயே.()

## நேரிசைவெண்பா.

மன்னும் விபவ மதிகடகம் பிற்பக்கம்
துன்னுந் திரிதியையினிற் சொல்சதயம்—பொன்னும்
நவமணியு மீமுத்து ராமலிங்கத் தோமான்
சிவனடியைச் சேர்ந்த தினம். (8)

---

நாகை "நீலலோசனி"ப் பத்திராதிபர்

## ஜி. சதாசிவம்பிள்ளையவர்கள் பாடியவை.

சீராச ராசேந்த்ரா சேதுபதி செகத்தைவிட்டுச் சென்றா ரென்றே
நாராசந் தனைக்காய்ச்சி நடுச்செவியில் விட்டாற்போல் நவிலக் கேட்டோம்
தீராத துயர்வெள்ளத் தீக்கடலி லாழ்ந்திட்டோம் செயல்வே றுண்டோ?
பாராருந் தமிழ்நாட்டின் பாவமதை யென்னென்று பகரு வோமே. (1)

பாற்கரனார் தான்மறைந்தார் தமிழ்ப்பாண்டித் துரைவேந்தும் பாரை விட்டார்
ஏற்பவருக் கில்லையெனாத் துறைசையம் பலவாண ரேகி விட்டார்
காப்பதற்குச் சீராச ராசேந்த்ரா னுளனென்று கருதி வந்தோம்
பார்ப்பைவிட்ட பறவைபோல் பறந்துவிட்டார் பாவலர்கள் பாவ மந்தோ! (2)

பாடாத புலவரில்லை பரிசுபெறாப் பாவலரும் பாரி லில்லை
நாடாத செல்வரில்லை நல்காத வறியவரும் ஞாலத் தில்லை
ஓடாத பகைவரில்லை யுதவிபெறா வுறவினரு முலகி லில்லை
வாடாத திருமுகத்துச் சீராச ராசேந்த்ரா மறைந்தா யந்தோ! (3)

தந்தையாம் பாற்கரரைத் தரிசித்து வருவதற்குச் சார்ந்திட் டாயோ?
செந்தமிழ்முச் சங்கத்தைச் சிவலோகத் தினும்நாட்டச் சேர்ந்திட் டாயோ?
சந்தமார் திருப்புகழைச் சண்முகன்முன் பாடுதற்குச் சார்ந்திட் டாயோ?
எந்தையே சீராச ராசேந்த்ரா என்சென்று மியம்பு வாயே. (4)

சேதுநா டாள்வதினும் சிவலோக நாடாளல் சிறந்த தாமோ?
சீதநீர் வைகையிலும் சிவகங்கை தமிழ்ச்சுவையைத் தெரிந்த துண்டோ?
ஓதுதமிழ்ப் புலவரினு மும்பர்நாட் டெப்புலவர்க் குயர்வு முண்டோ?
ஏதுநலங் கருதிநீ யிம்பரொரீஇ யும்பர்சென்று யெங்கள் கோவே. (5)

உமைநாட்டும் பாகத்தெம் சிவபெருமான் றிருவருளா லுலகந் தன்னில்
தமிழ்நாட்டின் தவப்பயனுச் சேதுபதி திருமரபு தழைத்தே யோங்கும்
கமைநாட்டுஞ் சிராச ராசேந்த்ர சேதுபதி காதல் மைந்தன்
சுமைநாட்டும் நிலந்தாங்கி யாவரையுங் காப்பனெனத் துணிந்து ளோமே. (6)

சூற்கொளுநன் மேகமெனச் சொன்மாரி பொன்மாரி சொரிந்த எங்கள்
வேற்கரனேர் பாற்கரனர் மீண்டுமேவ தரித்துள்ளார் மேன்மை யாகப்
பார்க்கு ளுயர்சேதுதிரு நாடாட்சி கைக்கொண்டு பரிபா லிப்பார்
வாக்கிலுயர் புலவர்களின் வாட்டமெலாந் தீர்த்தளிப்பார் வள்ள லாரே. (7)

---

கல்லல்

குக. மணிவாசகசரணலையசாமி அவர்கள்

பாடியவை.

ஆசிரியவிருத்தம்.

வேற்கரன்மா தந்தையன்னை யடிக்கணங்க ளுளம்பொலியு மேலோன் மேலோர்
பாற்கரவா வின்பமிகு மன்புள்ளோ னெப்பில்லாப் பண்பு வாய்ந்த
பாற்கரமா லருந்தவத்தி லுதித்துலகம் புகழ்ந்துதினம் பரவ வெம்ம
னேர்க்கரசாய் முகவைநகர் தனைப்புரந்த வெம்மிறையே! நுண்மாண் சீல! (1)

மாராச ராசேசு வரமுத்து ராமலிங்க மகிபா நீரும்
பூராச ராசரெலா மடிவணங்கும் பொற்புடைய பூமா தேவர்
நீராச ராசனென நினைவணங்கச் சிவனுலக நேயத் தானற்
பாராச ராசடையப் பாசாசை துறந்தனையோ பகர்தி யைய! (2)

என்னுரிமை யரசேமத் தியவிசையின் வரம்பறிந்த விறைவா வீங்கு
நின்னுரிமை மாதரழ மக்களழச் சுற்றமழ நேய ரோடுந்
தன்னுரிமைத் தேயமழ வெமதிருகண் ணீர்ததும்பத் தகைசே ராட்சி
முன்னுரிமை முதற் களித்துச் சிவலோக மருவினையோ மன்னே! மன்னே! (3)

பூபாலனாப்பிறந்து புகழ்ப்பால னாகியிந்தப் புவனம் போற்ற
மாபால மொன்றினைமா னாமதுரை வைகைதனில் வழங்கி மின்னு
மாபால னடிமறவா நிறையுளத்த! மயிர்ப்பால வழிதோ யாது
காபாவியுலகமது சென்றனையே நிற்போல்வார் காணே னையா! (4)

மதுநோக்கி யளிமூரலுந் தொடைமார்பா வுலகமிதை மாட்சி யாகப்
பொதுநீக்கித் தனியரசு புரக்குமிங்கி லாந்தரசின் புகழைப் போற்றிப்
பொதுநோக்கத் துடன்பலவாம் பெரும்பதவி தனையேற்றுப் புவன முய்யும்
புதுநோக்கஞ் செலுத்தியநீ சிவலோகம் புகுந்ததுவும் புகலற் பாற்றே! (5)

மாட்சிமிகும் புதுவைநகர் மார்த்தாண்ட பைரவப்பேர் மன்னன் வைகுங்
காட்சிதனைக் கண்டனையோ கலந்துறைந்து மகிழ்ந்தனையோ கவின்சேர் ஞாலந்
தாட்சியின்றி முறைபுரிந்த தமிழ்வேந்தர் நீரிருவீர் தழுவி னீரோ
மாட்சிமிகும் நுந்தையொடு முன்னோரும் வரவேற்று மகிழ்ந்திட் டாரோ. (6)

சேரமான் பெருமானார் காவல்செயுஞ் சிவலோகஞ் சிறப்பாய் நீயுஞ்
சேரமான் மழுக்கரத்த னவருடனே நட்படையச் செய்திட் டானோ
தீரமான மும்முடிமன் னவர்குழுவைச் சேர்ந்துறவு செய்திட் டாயோ
வாரமான் பொய்நீத்தை யழியாத புகழுடம்பின் மன்னி யண்ணால்! (7)

பிறந்தவர்கள் யாரேனு மிவ்வுலகி னிலைத்தலின்றிப் பெற்ற காயந்
துறந்திறந்து போவதுவே வழக்கெனினுஞ் சார்ந்தாரைத் துணைவர் தம்மை
மறந்தவனி வாழ்நாளும் பாதியிலே வெறுத்தகன்ற வாறு நோக்கி
னறந்திறம்பு நெறியன்றோ நீயறியா ததுவென்னே யரச ரேறே! (8)

அறிவுடையார் புகழுடையார் தமைநோக்கின் முதனின்றா யகிலந் தன்னை
வறியதென வைத்தகன்றாய் சிவனாணை யாவருமே மறுத்தற் கொண்ணா
நெறியிருந்த நின்பிரிவை நினைத்துநினைத் தவசமுறு நினைவி னெற்கிங்
கறிவதனா லாறுதலை யடைதலின்றி வழிகாணே னறிக மாதோ. (9)

வேண்பா.

சீல விபவ தெறிகடகம் நாலைந்தின்
மால்முத்து ராமலிங்க மன்னவனார்—ஏலும்
பவலோகம் விட்டுப் பரமனார் மேவுஞ்
சிவலோகஞ் சேர்ந்த தினம். (10)

## மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை உபாத்தியாயர்
## சு. நல்லசிவன்பிள்ளையவர்கள்
### பாடியவை.

கற்பகமே முதலாய வைந்தருவு நாணும்வகை கற்றோர்க் கெல்லாம்
அற்பகமே கொண்டுதவித் தமிழ்புரந்த கோமானே யரசரெல்லாம்
அற்பகலாத் தினம்புகழும் இராஜரா ஜேச்வரப்பே ராசே யின்றோ
பொற்புறுநின் புயமதனைப் புவிமடந்தை பிரிதலுற்றுப் புலரு நாளே. (1)

இன்றோநற் றமிழ்ப்புலவர் கூடிழந்த புட்போல வினையு நாளிங்
கின்றோசெந் தமிழுலகந் தமிழ்க்குரிய கோமானை யிழந்த நாண்மற்
றின்றோநன் முகவைநக ரளபபரிய துயர்க்கடலுற் றிருக்கு மோர்நாள்
இன்றோவிட் புலவர்குழாங் களிகூர நீவிருந்தா யெய்து நாளே. (2)

மாமதுரைத் தமிழ்ச்சங்கத் ததிபதியே முகவைநகர் மன்னா கற்றோர்
நாமதுரத் தமிழ்ப்புலமை கண்டுதவு நல்லோனே ஞாலம் போற்ற
நீமதுரை வருநாளென் றுனைக்கண்டென் குறையதனை நிகழ்த்த லென்று
சேமதுரை யேயிந்நா ளினைப்பிரிந்த வூழ்வினையின் செயல்தா னென்னே. (3)

இந்நாட்டுப் புலவருள்ளங் களிகூர வினிதளித்த வியல்பே போன்று
பொன்னாட்டுப் புலவருள்ளுங் களிகூர நனியுதவப் புகுந்தாய் கொல்லோ
எந்நாட்டு மிசையுடையாய் இராஜரா ஜேச்வரனே யெங்கோ மானே
தென்னாட்டுப் புரவலரின் முன்னாட்டும் பெருமைதிகழ் சீரி யோனே. (4)

வந்துனைத் தரிசிப்பா னினைந்திருந்தேன் காற்பிணியின் வருத்த மிக்க
வெந்துயரா னின்சமுகங் கண்டுளமா றுதலடையும் விதியி லாதே
னொந்திவணிங் கிருந்தேனென் புரிவேனென் பாக்களினை நோக்கி நோக்கி
யிந்துவன முகமலர்ந்துன் கவியினிமை யெனப்புகல்வா ரினியிங் காரே. (5)

### வேறு.

சகமனைத்துந் துயரமுற விபவ வாண்டிற்
சார்கடக ரவிதிகதி யீரொன் பானென்
றிகலசுரர் குருவார மமர பக்கத்
தியைந்ததிரு தியைத்திதியி லிராச ராசர்
புகழ்மதுரைத் தமிழ்ச்சங்கத் ததிபன் வெற்றி
புனைமடந்தை திகழ்மார்பன் பொன்னு டாளு
மகபதியை நிகர்முகவை யிராஜ ராஜேச்
வரநிருபன் பசுபதித்தாண் மருவி னானே. (6)

---

# 1928-ம்ஸ் ஜூலைமீ 24உ (விபவஸ் ஆடிமீ 9உ) காலை 9 மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ள-ள-ஸ்ரீ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L., அக்கிராசனம்வகித்தவர்.
2. ,, V. S. ராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள் B.A., B.L.,
3. ,, ராவ்ஸாஹிப் M. மாணிக்கவாசகம்பிள்ளை அவர்கள் B.A., B.L.,
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C., இவர்கள் வந்திருந்தார்கள்.

## தீர்மானங்கள்.

I. புதுக்கோட்டை மஹாராஜா அவர்களின் மரணத்தினால் பொதுவாகவே தமிழுலகத்திற்கும், முக்கியமாக மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கும் நேர்ந்த பெரும் நஷ்டத்தைக்குறித்து நிர்வாகசபையார் அநுதாப மொழிகூறி ரிக்கார்டில் பதிவு செய்தார்கள்.

II. 1928ஸ் பிப்ரவரிமீ முதல் ஜூன்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

III. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய காமக்கூர்த் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ M. சுந்தரமுதலியாரவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

IV. சங்கத்தின் 1927–1928-ம்ஸ்த்திய வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யவேணுமென்று மதுரை ஹைக்கோர்ட்வெக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

V. சங்கத்தின் வருஷோத்ஸவத்தை நடத்துவதற்குத் தேதி குறிப்பிட வேணுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக் கொள்ளலாயிற்று.

VI. இம்மதுரைத்தமிழ்ச்சங்க மஹாஸபையாரின் அடுத்தகூட்டம் வரையிலும் இப்பொழுதுள்ள நிர்வாகஸபையங்கத்தினர்களே தொடர்ச்சியாக அங்கத்தினராயிருந்துவருவார்களென்பதாகத் தீர்மானிக்கலாயிற்று.

VII. சங்கம் லைப்ரேரியன் A. நாராயணையர் ரஜாபெற்றிருந்த எழுதினங்களுக்கும் சம்பளம் ஸ்பெஷல்கேஸாக அனுமதிசெய்யலாயிற்று.

மதுரை, 24—7—1928

N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

# மதிப்புரை.

கம்பராமாயண அயோத்யாகாண்டம் (உரையுடன்):—இதுவரை, கம்பராமாயண அயோத்யாகாண்டப்பகுதிக்குச் சிறந்ததோர் உரை கிடையாதிருந்தகுறை நீங்கவேண்டுமென்று நெடுநாளாகப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டுவந்தது. அதனை இப்பொழுது நீக்க முன்வந்து, ஸ்ரீமத். வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரவர்கள் தமது புதிய உரைப்பதிப்பால் தமிழுலகின் நன்றியறிதற்கு உரியவர்களாய் விளங்குகின்றனர். இதற்குமுன் அவர்கள் உரையெழுதி வெளியிட்ட பாலகாண்டத்திற்போலவே, இவ் வயோத்தியாகாண்டத்திலும் ஒவ்வொரு செய்யுளுக்கும் பதவுரை, கருத்துரை பதசாரம், தொனிப்பொருள், விகற்பவகை உரைகள், இலக்கணக்குறிப்பு, அணிகளின் விளக்கம், ஒத்தபகுதி மேற்கோள்கள், புராணகதைகள் முதலியன செவ்வையாகக் காட்டப்பட்டுச் செய்யுண்முதற்குறிப்பகராதியும் அரும்பதவகராதி முதலியனவும் சேர்க்கப்பெற்றுள்ளன அன்றியும், இதில் ஒவ்வொரு படலத்தின்முகப்பிலும் அவ்வவற்றின் கதைச்சுருக்கமும் எழுதிச்சேர்த்திருத்தல் அருமையுடையதாகும். உரைநடையின் வாக்கியங்கள் மிகத் தெளிவான சொற்றொடர்களான் அமைந்திருக்கின்றனவென்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடற்பாலது. ஆகையால் எத்தகையினரும் கம்பராமாயணத்தை எளிதினிற் கற்றுப் பொருள்காணுதற்கு இது சிறந்த கருவியாமென்பதில் ஐயமென்னை? இது நிற்க

இப்பதிப்பு, இதற்குமுன் அச்சிடப்பட்ட மற்றைக் கம்பராமாயணப் பதிப்புகளெல்லாவற்றிலும் விசேஷமாகச் சீர்திருத்தம் பெற்று விளங்குகிறது. மிகச் சிறந்த ஏட்டுச்சுவடிகள் பலவற்றோடு ஒப்புநோக்கி ஆசிரியரவர்கள் இதனைப் பிழையறப் பரிசோதித்திருக்கிறார்கள். பாடாந்தரங்களையெல்லாம் ஆராய்ந்து அவற்றில் விழுமியவற்றை மேற்கொண்டிருக்கின்றனர். சிலபிரதிகளில் அதிகபாடமாகக் கண்ட செய்யுட்களை இயைந்தவாறாக இடைப்புகுத்தியுள்ளார். மூலச்சுவடிகளிற் சிற்சில படலங்களின்பெயர் பிறவாறு வழங்குவதற்குக் காரணங்காட்டி, அவற்றின் பொருத்தத்தையும் ஆராய்ந்து நிறுவியுள்

ளார்கள். இங்ஙனமே மற்றும் அவர்கள் இப்பதிப்பினைச் செப்பமுறச் செய்தற்குவேண்டுவனவெல்லாம் குறைவின்றிப் புரிந்திருத்தல் பெரிதும் பாராட்டற்குரியது. இராமாயணத்திற்கு உரை யெழுதிப் பதிப்பித்தவர்களில் இத்துணை உழைப்பு மேற்கொண்டவர்கள் இதுகாறும் எவருமில்லையென்று துணிந்து கூறலாம். ஆகையால் ஆசார்யரவர்களது ஊக்கமும் உழைப்பும் வீணாகாவண்ணம் தமிழ்மக்களனைவரும் இவ்வுரையினைப் படித்துப் பயனடைவார்களாக. சுமார் 950 பக்கங்களளவுள்ள இப்புத்தகத்தின் விலை ரூ 5. ஸ்ரீமத் வை. மு கோபாலகிருஷ்ணமாசார்யரவர்கள், 17, தெளிசிங்கப்பெருமாள்கோவில்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

கதாவாசகபாடமும் செய்யுட் பாடமும் (முதற்பாகம்):— இது தஞ்சைஜில்லா இராஜாமடம் போர்டு நடுத்தரக்கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திரு. சாமி—சிதம்பரனார் அவர்கள் எழுதியது. ஆங்கிலப் பள்ளிகளிற் றமிழ்ப்பாடப் புத்தகமாகத் தேர்ந்தெடுத்தற்குரிய முதன்மைவாய்ந்தது. ஆறும்வகுப்பு மாணவர்கள்பொருட்டுத் தகுதியறிந்து அமைக்கப்பட்ட வசனபாடங்களையும் செய்யுட்பாடங்களையும் பொருத்தமாகக்கொண்டு விளங்குவது. இளைஞர்களிடையே கல்வியறிவொழுக்கங்களை நன்கு வளர்க்கவல்ல விஷயங்கள் இதன்கண் மலிந்து காணப்படுகின்றன. ஆகையால், கலாசாலைகளின் தலைமையதிகாரிகள் இதனை ஆதரவுடன் போற்றி ஆசிரியரவர்கட்கு ஊக்கமளித்தல் மிகவும் வேண்டற்பாலது. நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை அணா 7. வேண்டுவோர் ஆசிரியரவர்களிடமாவது, மதுரை, புஸ்தகவியாபாரம், மகா-௱-௱-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்களிடமாவது பெற்றுக்கொள்ளலாம்

கதாவாசகபாடமும் செய்யுட்பாடமும் (இரண்டாம்பாகம்):—இதுவும் ஷை சாமி-சிதம்பரனாரவர்களால் இயற்றப்பெற்றது. ஏழாம் வகுப்புப் பாடபுத்தகமாதற்கு ஏற்ற தகுதியுடையது. இதன் விலை அணா 6.

ஷை (மூன்றாம்பாகம்):—இதுவும் ஷை ஆசிரியரவர்கள் எழுதியதேயாகும். எட்டாம்வகுப்பிற்குப் பாடமாகத்தக்கது. இதன் விலை அணா 8. இவ்விரண்டுபுத்தகமும் மேற்கண்ட விலாசதார்களிடம் கிடைக்கப்பெறுவனவாம்.

சத்திநிபாதக்கோவை:—இது, வேதகழகக் கேள்விநூலாசிரியர் சதுர்வேதி ஸ்ரீமத். சிவத்யாநாநந்தமஹருஷியவர்கள் இயற்றியது. எல்லாம்வல்ல இறைவனது வலிமை மக்களிடத்துப்பதியும் முறையைத் தமிழ்நூல்வழக்கான அகப்பொருட்டுறைகளின்வாயிலாக விளக்குவதொரு பிரபந்தமாகலின் இஃதிப்பெயர் பெறுவதாயிற்று. மற்றும் இதன் அமைப்பினைக்குறித் தறியவேண்டுவனவெல்லாம் இதன் முன்னுரையால் நன்கு விளங்குவனவாம். இதன் செய்யுட்கள் யாவும் செம்பாகமான நடையுடன் ஆழ்ந்தகருத்தினைப் புலப்படுப்பனவாய் அமைந்துள்ளன. மறைநூன்முடிவுகளும் சில ஆதுனிகக் கற்பனைகளும் இதில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இதன் விலை அணா எட்டு.

சிறுபிரபந்தங்கள்:—இதுவும் ஷை சிவத்யாநாநந்த மஹருஷியவர்களால் இயற்றப்பெற்ற விநாயகர் பாதாதிகேசம், தக்ஷிணாமூர்த்திதோத்திரம், பரசிவ மும்மணிக்கோவை, கண்மணிமாலை, ஏகநாயகவாதப்பதிகம், சிவாபராதஸ்துதி, தூய்பொருளாட்சி, திருநான்மணிமாலை என்னும் பிரபந்தங்கள் அடங்கியதொரு புத்தகமாகும். ஆரியம், செந்தமிழ், ஆங்கிலமென்னும் சீரியமொழிகளிற் கலையறிவுநிரம்பிய ஆசிரியரவர்களது கவிவன்மை இதனுள் நன்குவிளங்கக் காணலாம். ஸ்ரீமத்-சிவத்யாநாநந்தமஹருஷியவர்கள் வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தல்போன்ற உபகாரமான வேலையில் உழைத்துவருதல்மட்டுமன்றி, இத்தகைய சிறு பிரபந்தங்களையும் இயற்றியுதவியிருத்தல் பாராட்டற்குரியதே.

மேற்குறித்த இரண்டுபுத்தகமும் அடியிற்குறித்துள்ள இடங்களிற் பெறலாம்.

(1) சரஸ்வதிபுத்தகசாலை, 70 செட்டித்தெரு, கொழும்பு.

(2) நவீனகதாபுத்தகசாலை, மங்கமாரிவீதி, (40-வது கல்வி முனை), ரங்கூன், பர்மா.

உ

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L T.,) அவர்கள்
எழுதுவது.

[௩ ச உ - ஆம்பக்கத்தொடர்ச்சி]

## வேற்றுமைமயங்கியல்.

84-வது சூத்திரம். கரும மல்லாச் சார்பேன் கிளவிக்
குரிமையு முடைத்தே கண்ணென் வேற்றுமை.

இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், சேனுவரையர், நச்சினர்க்கினியர் இம்மூவரும் ஒரேபொருள் கொண்டுள்ளனர்.

கருமம் என்ற சொல்லுக்கு ஈண்டு வினைப்பயனுகிய சையோகம் என்பது பொருள் என்று 'கருமமாவது ஈண்டு மெய்யுறுதலாயின்' என்னுஞ் சேனுவரையர்வாக்கியத்தால் அறியப்படுகின்றது.

தூணின்கட் சார்ந்தான் என்பது ஆசிரியர்காலவழக்கில் இல்லாவிடினுஞ் சேனுவரையர்காலவழக்கில் வந்திட்டது என்று அவர்மொழியால் தெளிவாகின்றது.

நச்சினர்க்கினியத்தில் 'இதனுள் அரசாது சார்தற்கிடமாகிய அருள் தன்பொருளதனி னீங்காதே பிறிதின் பொருளாகிய செயப்படு பொருட்கட் சென்றது ஏழாவது' என்று ஒரு வாக்கியமுளது. அங்கு ஏழாவது என்ற சொல் அந்துவயிக்கவில்லை.

86-வது சூத்திரம். கன்றலுஞ் செலவு மொன்றுமார் வினையே.

பிழைதிருத்தம்:—சைவசித்தாந்தக்கழகச் சேனுவரையப்பதிப்பில் 'இரண்டாவதற்கும் ஏழாவதற்கும் ஒருதொழில் என்றவாறு' என்றுளது, அங்கு தொழில் என்பது தொழில என்றிருக்கவேண்டும்.

87-வது சூத்திரம்.
முதற்சினைக் கிளவிக் கதுவேன் வேற்றுமை
முதற்கண் வரினே சினைக்கை வருமே.

இது 'சினைநிலைக் கிளவிக் கையுங் கண்ணும்........' (தொல். சொல். 85) என்னுஞ் சூத்திரத்திற்குப் புறனடைச்சூத்திரம்[1] என்பது உரையாசிரியர்மதம். நியமசூத்திரம்[2] என்பது சேனாவரையர்மதம். சேனாவரையர்மதமே பொருத்தமானது.

88-வது சூத்திரம்.
முதன்முன் ஐவரிற் கண்ணென் வேற்றுமை
சினைமுன் வருதல் தெள்ளி தென்ப.

இதுவும் நியமசூத்திரமென்பது, 'இது வருஞ் சூத்திரத்திற்கு மொக்கும்' என்று முற்சூத்திரவுரையிற் சேனாவரையர் கூறியுள்ளார். இவ்வாறிருக்க, நச்சினார்க்கினியர் முற்சூத்திரத்தில் உருபுமயக்கம் கூறுகின்றது எனவும், இச்சூத்திரத்தில் 'இது பொருண்மயக்கம் உணர்த்துகின்றது' எனவும் கூறுவது செவ்வனே விளங்கவில்லை.

92-வது சூத்திரம்.
மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி
நோக்கோ ரனைய வென்மனார் புலவர்.

---

[1] தென்மொழியில் புறனடைச்சூத்திரமும் வடமொழியில் அபவாத ஸூத்ரமும் (அபவாதசூத்திரமும்) ஒருபொருட்கிளவி. அபவாதசூத்திரமாவது ஒருசூத்திரத்தால் விதிக்கப்பட்டதற்கு முற்றும் மாறுபாடாக விதிக்கும் மற்றொரு சூத்திரம். உதாரணமாக 'உகர விறுதி யகர வியற்றே' (தொல். எழுத். 254) என்பதற்கு, 'சுட்டுமுதலிறுதியியல்பாகும்மே' (தொல். எழுத். 257) என்பது அபவாதம். எனெனில் முற்சூத்திரத்தால் விதிக்கப்பட்ட வல்லெழுத்து மிகுவதைத் தடுத்து இயல்பைப் பின்னர்ச்சூத்திரம் விதிக்கின்றது.

[2] நியமசூத்திரமாவது ஒருசூத்திரத்தில் ஒன்றை உத்தேசித்து விதிக்கப்பட்டிருக்கும் பலவற்றிலோ, சூத்திரமின்றி இயற்கையாற் கொள்ளப்படும் பலவற்றிலோ, சிலவற்றையே கொள்ளவேண்டும் என்று விதிக்கும் சூத்திரம். உதாரணம்:— வ்ரீஹீந் அவஹந்தி (நெல் குத்தவேண்டும்) என்னுமிடத்து அவிக்கு வேண்டிய அரிசியை நெல்லைக் குத்தியும் கொள்ளலாம், நகத்தால் உமியை உரித்தும் கொள்ளலாம். இவ்வாறிருக்க நெல்லைக் குத்தித்தான் அரிசியைக் கொள்ளவேண்டும் என்று, குத்தவேண்டும் என்ற இவ்விதி நியமிக்கின்றது.

சேனவரையர் “ ‘அதன்வினைப்படுத லதனினாதல்’ (தொல். சொல். 74) என்றும் ‘புதுமை பழமை யாக்கம்’ (தொல். சொல். 78) என்றும் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் ஏதுப்பொருண் மேற்கூறப்பட்டமை யான் இச்சூத்திரம் வேண்டாவெனின் என்று ஆசங்கித்து மயக்கமாத லொப்புமையான் மயக்கவாராய்ச்சிக்கண் ஈண்டுங் கூறினாராகலின், கூறி யதுகூறலென்னுங் குற்றமின்றென்பது” என்று கூறியுள்ளார். ‘அதன் வினைப்படுத லதனினாதல்................இன்னானேது...........’ என்னுஞ் சூத்திரத்தால் ஏதுப்பொருளில் மூன்றாம்வேற்றுமை வருமென்று விதித்து, ‘புதுமை பழமை யாக்கம்’ என்னுஞ் சூத்திரத்தால் ஆக்கக் கிளவியின் முன் ஐந்தாம்வேற்றுமை வருமென்றும் விதித்ததனால், அவ்வேது ஆக்கக்கிளவியோடு இயையின், மூன்றாவதைத்தவிர்த்து, ஐந்தாவதுதான் வருமோ என்று மாணாக்கனுக்குத் தோன்றக் கூடிய ஐயத்தை இச்சூத்திரம் போக்குகின்றது என்பதையும் உடன் கூட்டிச்சொல்லலாமோ என்பது எனது கருத்து.

| | |
|---|---|
| 94-வது சூத்திரம். | அதுவென் வேற்றுமை யுயர்திணைத் தொகைவயி னதுவெ னுருபுகெடக் குகரம் வருமே. |

இச்சூத்திரத்தின்பொருள்:—

உரையாசிரியர்:-மேல் ‘இயற்கையி னுடைமையின் முறைமையின்’ (தொல். சொல். 80) என ஆறாவதனை முறைமைப்பொருட்கு உரித் தென்று ஓதினான்; அம் முறைப்பொருள் உயர்திணைக்காயின் அது என் உருபு கெடக் குகரம் வரும், எ-று. நம்பிக்குமகன் என வரும். நம்பியது மகன் என்புழி இழுக்குள்ளது கண்டு அது காத்தவாறு.

சேனவரையர்:— ஆறும்வேற்றுமைப்பொருண்மேல்வரும் உயர் திணைத்தொகைக்கண் உருபுவிரிப்புழி, அதுவென்னுமுருபு கெட அதன் பொருட்கண் நான்காமுருபு வரும் எ-று. ஈண்டு அதுவெனுருபு கெடுதலாவது அவ்வுரு பாண்டுவாராமை. நம்பிமகன், நங்கை கணவன் என்னுந் தொகைகளை விரிப்புழி, நம்பிக்குமகன், நங்கைக்குக் கணவன் என நான்கனுருபு வந்தவாறு கண்டுகொள்க.

நச்சினார்க்கினியர்:—உயர்திணைப்பொருள் இரண்டுசேர்ந்தவிடத்து உருபுவிரிப்புழி நான்கனுருபு விரியும்; அதுவன்றி அவ்வுயர்திணைத்

தொகைவயின் ஆறும்வேற்றுமையை விரிப்புழி, அவ் வதுவெனுருபு தான் கெட்டுப்போக அதனுடைமைப்பொருள் விரியும் எ-று.

உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் இம்மூவருள் ஒவ்வொருவரும் இச்சூத்திரத்திற்குப் பொருள் வெவ்வேறாகக் கொண்டனர். உரையாசிரியர்மதப்படி அதுவென்வேற்றுமை என்பது உயர்திணைத்தொகைவயின் என்பதற்குப்பின் வருவிக்கப்படும் 'வருமாயின்' என்பதனோடு தொடரும். உயர்திணைத்தொகைவயின் என்பதற்கு உயர்திணையோடுசம்பந்தப்பட்டவிடத்தில் என்பது பொருள். உதாரணம் நம்பிக்குமகன் என்பதை நம்பியதுமகன் என்று கூறுவது தவறு என்பதே. நம்பியது என்ற சொல்லிலுள்ள அது என்னும் உருபு நம்பியதுபொருள் என்றாற்போல அஃறிணையைக்கொண்டு முடிவது இலக்கணத்துக்கு ஒத்ததாமேயன்றி, உயர்திணையாகிய மகன் என்பதனோடு நம்பியது என்பது இயையாது என்பது அவர்கருத்து. சேனாவரையர்மதப்படி அதுவென்வேற்றுமை யுயர்திணைத்தொகைவயின் என்பதற்கு அதுவென்வேற்றுமைப்பொருள் தொகவரும் உயர்திணை வேற்றுமைத்தொகையில் என்பது பொருள். உதாரணம் நம்பிமகன் என்னுந் தொகையை நம்பிக்கு மகன் என்றே விரிக்கவேண்டுமென்பது. இவ்வாறு ஒரு நியமங்கொள்வதால் யாது பயன்? ஆறும்வேற்றுமையாக விரித்தாற் படுமிழுக்கு என்னை? தொகைச்சொற்களை இங்ஙனந்தான் விரிக்கவேண்டுமென்று ஒரு காரணமுமின்றி ஆசிரியர் விதிப்பாரா? இவ்வண்ணம் தோன்றும் ஐயங்கட்கெல்லாம் சமாதானம் ஏற்படவில்லை. தொகை என்பதற்கு, சமாசம் என்று பொருள்கொண்டதனால், இவ்வாறு இடர்ப்படுகின்றாரென்பது, எனது அபிப்பிராயம். நச்சினார்க்கினியர் மதப்படி 'உயர்திணைத்தொகைவயின் குகரம் வருமே; அதுவென் வேற்றுமை அது என உருபு கெட வரும்' என்பது சூத்திரத்திற்கு அந்நுவயம். இவ்வாறுகூறின் வாக்கியபேதம் என்னுங் குற்றம் வரும். இவ்வாறுகூறுவதற்குக்காரணம் தொகை என்பதற்குச் சேனாவரையர்போலச் சமாசன் என்று பொருள்கொண்டதும் நின்மகள் என்பதை நினக்கு மகள் என்று விரிப்பது தவறு என்ற எண்ணங்கொண்டதுமே. நின்மகள் என்பதை விரிப்புழி நினக்கு மகளாகியவள் என்று ஆக்கங்கொடுத்துக் கூறல்வேண்டுமென்கிறார். அவ்வாறாயின் நம்பிமகன் என்னுமிடத்தும் நம்பிக்கு மகனானவன் என்று ஏன் ஆக்கங்கொடுத்துச்

சொல்லவேண்டாம்? மேலும் உயர்திணைத்தொகைவயின் என்பதற்குப் பின் உருபுவிரிப்புழி என்று வருவித்துக்கொள்ளவேண்டும் நின்மகன் என்னுமிடத்து விரிப்பு எவ்வாறு என்பதும் சூத்திரத்தில் உணர்த்தப் படவில்லை.

96-வது சூத்திரம்.
தடுமாறு தொழிற்பெயர்க் கிரண்டு மூன்றுங்
கடிநிலை யிலவே பொருள்வயி னான.

இச்சூத்திரத்திற்கு உரைகாரர்கள் கூறும் பொருளே பொருளாயின், இச்சூத்திரத்தாற் பயனுளதாகத் தோன்றவில்லை. ஆசிரியர் வேறுபொருளைக்கருதி இச்சூத்திரஞ் செய்திருக்கவேண்டுமென்று என் கருத்து.

97-வது சூத்திரம்.
ஓம்படைக் கிளவிக் கையு மானுந்
தாம்பிரி விலவே தொகைவரு காலை.

புலிபோற்றிவா என்ற தொடர்க்குப் பொருள் சந்தருப்பத்துக்குத் தக்கவாறு புலியைப்போற்றிவா என்றாவது புலியாற்போற்றிவா என்றாவது கொண்டுவிடலாம். புலியைப்போற்றிவா, புலியாற்போற்றிவா என்ற பிரயோகங்கள் இரண்டு மூன்று வேற்றுமைப்பொருள்களையுணர்த்துஞ் சூத்திரங்களாலேயே அமைக்கப்படும். ஆகவே இச்சூத்திரம் எற்றுக்கு? இதனை மனத்தில்வைத்துக்கொண்டுதான் 'இரண்டு வேற்றுமைக்கும் ஓம்படைப்பொருண்மை இச்சூத்திரத்தா னெய்துவித்தாரெனினு மமையும்' என்று சேனாவரையர் கூறியிருக்கவேண்டும்.

பாடபேதம்:—நச்சினார்க்கினியப்பதிப்பிற் சூத்திரத்தில் தொகவருகாலை என்றும் மற்றப்பதிப்புக்களில் தொகைவருகாலை என்றும் உள்ளன. நச்சினார்க்கினியப்பதிப்பில் 'இரண்டுருபும் பொருளும் ஒப்ப விரிந்து இரண்டும் மயங்கியவாறு காண்க' என்றுளது. சென்னை ஓரியண்டல் லைப்ராரிக் கையெழுத்துப் பிரதியில் ஒப்ப விரிந்து என்பதற்குப் பிரதியாக ஒப்ப விரிந்துழி என்றுளது. இஃது பொருத்தமாயுள்ளது என்று தோன்றுகிறது.

99-வது சூத்திரம்.
குத்தொக வருஉங் கொடையெதிர் கிளவி
யப்பொரு ளாறற் குரித்து மாகும்.

இச்சூத்திரத்தின் பொருள்:—

உரையாசிரியர்:-நான்காம்வேற்றுமை தொக்குக் கொடையெதிர்ந்து நின்றவழி ஆறாவது சொல்லவும் அமையும் எ-று. நாகர்பலி என்பது ஆண்டு நாகர்க்குப்பலி என நான்காவது தொக்குநின்றது; அந்நிலைக்கண் நாகரதுபலி என ஆறாவதும் ஆக எ-று.

சேனாவரையர், நச்சினார்க்கினியர்:— குவ்வென்னு முருபு தொகவரூங் கொடையெதிர்கிளவியாகத் தொகையினது கொடையெதிர்தலாகிய அப்பொருண்மை ஆறாம்வேற்றுமைக்குரித்துமாம் எ-று நாகர்பலி என்பது நாகர்க்கு நேர்ந்த பலியென விரிதலேயன்றி நாகரதுபலியென விரியினு மமையு மென்றவாறு.

உரையாசிரியர்கூறியுள்ளபொருளே மேலானது; ஏனெனில் அவரது உரைபின்படி 'இது நாகர்பலி' என்னும் பிரயோகம்போலவே 'இது நாகரதுபலி' என்னும் பிரயோகமும் தவறல்ல என்று இச்சூத்திரத்தால் விதிக்கப்படுகின்றது. சேனாவரையர், நச்சினார்க்கினியர் இவ்விருவர் மதப்படி தொகைவிரியின்மாறுபாடு கூறப்பட்டுளது. அது கூறப்படவேண்டுவது அவசியமில்லையென்று முன்னரே கூறினேன். சேனாவரையர் உரையாசிரியர்மதத்தையும் பக்ஷாந்தரமாக 'நாகர்க்குக்கொடுத்தலை விரும்பி............அமையு மென்றவாறு' என்றசொற்றொடராற் கூறியுள்ளார்.

நான்காம்வேற்றுமைகொண்ட சொல் பின்வருமாறு வரலாம். பலி நாகர்க்குக்கொடுத்தான், நாகர்க்குப் பலி கொடுத்தான், அறத்துக்குக் கறக்கும், கரும்பிற்கு வேலி, கடிசூத்திரத்திற்குப் பொன், கைக்குக் கடகம், அவனுக்கு நண்பன் முதலியன. இவற்றில் முதற்பிரயோகத்தைத் தவிர மற்றவை, நான்காம்வேற்றுமை தொக்கு, நாகர்பலிகொடுத்தான் அறங்கறக்கும், கரும்புவேலி, கடிசூத்திரப்பொன், கைக்கடகம், அவன் நண்பன், என்று மாறலாம். இவற்றுள் 'நாகர்பலிகொடுத்தான்' என்னுமிடத்தில்தான் நான்காம்வேற்றுமை கொடையெதிர்கிளவியோடுவந்து தொக்கது. அறங் கறக்கும் முதலியவற்றில் அறம் முதலியன கொடையெதிர்கிளவியல்ல. ஆகவே முற்சூத்திரங்களால் நாகர்க்குப் பலிகொடுத்தான், நாகர்பலிகொடுத்தான் என்று இரண்டுவகைபர்கப் பிரயோகம் வரலாமென்று தெரிய, நாகரதுப்பலிகொடுத்தான் என்றும் வரலாமென்பதை இச்சூத்திரம் விதிக்கின்றது. சூத்திரத்தில் 'குத்தொக

வருஉங் கோடையெதிர்கிளவி' என்பதற்குக் குத்தொகவருவதற்குத் தகுதியுள்ள கோடையெதிர்கிளவி என்பது பொருள். 'கு' தொக்குவருவ தற்குத் தகுதி நாகர்க்குப்பலி என்னுமிடத்திற்போல், குவ்வுருபுள்ள சொல் பெயரைத்தழுவினல்தான் இருக்கும்; பலி நாகர்க்குக் கொடுத் தான் என்னுமிடத்திற்போலக் குவ்வுருபுள்ளசொல் வினையைத்தழுவி னல், 'கு' தொக்குவருவதற்குத் தகுதியுடையதாகாது.

பாடபேதம்:—இளம்பூரணப்பதிப்பில் 'கொடைஎதிர்தல் என்பது விழுப்பமுடையாரை நுதலிபக்காற் கொண்டுவைத்து விரும்பிக் கொடுத்தல்' என்றுளது. அங்குக் கோடை எதிர்தல் என்பதற்குப் பிரதியாக, கோடை என்றே இருத்தல் வேண்டும். ஏனெனில் விழுப்ப முடையாரை நுதலிபக்காற்[1] கொண்டுவைத்து[2] விரும்பிக்[3] கொடுத் தல் கொடையேயொழியக் கொடையெதிர்தலன்று. கொடையெதிர்த லாயின், கொடையெதிர்கிளவியாகிய நாகர் மற்றவருக்குப் பலி கொடுக்க வேண்டுவது இன்றாகையால் நாகர்பலி என்ற தொடர் பொருந்தாதாம். தேவதைகட்கு ஞானகாண்டத்தில் அதிகாரமே தவிரக் கர்மகாண்டத்தில் அதிகாரமில்லை யென்பது, நூற்றுணிபு.

100-வது சூத்திரம்.
**அச்சக் கிளவிக் கைந்து மிரண்டு**
**மெச்ச மிலவே பொருள்வயி னான.**

95-வது சூக்திரத்திற்போலவே பொருள்வயினான என்பதற்கு உரையாசிரியர் பொருளின்கண் என்று பொருள்கொண்டு இச்சூத்திரத் திற்குப் புலியின் அஞ்சும், புலியை அஞ்சும் என்று உதாரணங்கூறி யுள்ளார். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் வேற்றுமை தொக அவற்றின் பொருணின்றவழி என்று பொருள்கொண்டு 'பழியஞ்சும்' என்புழிப் பழியினஞ்சும், பழியையஞ்சும் என விரண்டும் ஒத்தகிழமைய வாய்நின்றவாறறிக என்று கூறியுள்ளனர். இன்னவாறு விரிக்க வேண்டுமென்று விதிப்பதிற் பயனில்லை யென்பது முன்னரே கூறப் பட்டது.

---

[1] விழுப்பமுடையாரை நுதலியக்கால்—உத்தேசித்ததேவதையைக் கூப்பிடும் போது.

[2] கொண்டுவைத்து—ஆவாஹனஞ்செய்து.

[3] விரும்பி—தனக்குச் சில பயனை வேண்டி,

101-வது சூத்திரம். அன்ன பிறவுந் தொன்னெறி பிழையாது
திரிபிட னிலவே தெரியு மோர்க்கே.

தாமோதரம்பிள்ளையவர்கள் சேனாவரையப் பதிப்பில் 'என்னே? தன் பொருளிற்றீராது...' என்ற பாடமுளது. சைவசித்தாந்தக்கழகப்பதிப்பில் 'என்னே? ஏனைய தன் பொருளிற்றீராது....' என்றுளது. பின் பாடமே தெளிவாயுள்ளது.

102-வது சூத்திரம். உருபுதொடர்ந் தடுக்கிய வேற்றுமைக் கிளவி
யொருசொன் னடைய பொருள்சென் மருங்கே.

இச்சூத்திரத்தின் பொருள்:-

உரையாசிரியர்:—பல உருபு தொடர்ந்து அடுக்கிநின்றவிடத்து இறுதியுருபு முடிந்தமுடிவே ஒழிந்தனவற்றிற்கும் முடிபாக எ-று. உ-ம். யானையது கோட்டை நுனிக்கட் குறைத்தான்.

சேனாவரையர்:—பலவுருபுந் தம்முட் டொடர்ந்தடுக்கிவந்த வேற்றுமைச் சொற்களெல்லாம் முடிக்குஞ்சொல் லொன்றனான் முற்றுப்பெற்று நடக்கும், அவ்வொன்றனாற் பொருள் சொல்லுமிடத்து எ-று. உ-ம். என்னொடுநின்னொடுஞ் சூழாது.

நச்சினார்க்கினியர்:—ஒருருபும் பலவுருபுந் தம்முட்டொடர்ந்து அடுக்கிவந்த வேற்றுமையுருபை இறுதியாகவுடைய சொற்கள் முடிக்குஞ்சொல்லொன்றனான் முற்றுப்பெற்று நடக்கும், அவ்வொன்றனாற் பொருள்செல்லும்பக்கத்து எ-று. உ-ம். என்னொடு நின்னொடுஞ் சூழாது, யானையது கோட்டை நுனிக்கட் குறைத்தான்.

சேனாவரையர்மதப்படி ஒரேவகையான உருபுகளைக்கொண்ட சொற்களே அடுக்காகும் என்பது. நச்சினார்க்கினியர்மதப்படி ஒரேவகையான உருபுகளும், வெவ்வேறுவகையான உருபுகளும் அடுக்காகலாம்என்பது. உரையாசிரியர் தரும் உதாரணத்தை நோக்குமிடத்து வெவ்வேறுருபுகளே வந்திருப்பினும், சூத்திரத்தின்பொருளைக் கூறுவதை நோக்குமிடத்து அவர் வெவ்வேறுருபுகளே வரவேணுமென்றுதான் கொண்டுள்ளாரென்று திண்ணமாகச் சொல்லமுடியாது. ஒரேவகையான பொருள்களைத்தான் அடுக்குவது உலகில் வழக்காகையால், சேனாவரையர் கூறுவது பொருந்துமோ வென்று தோன்றலாம். ஆனால், நின்

னுடும் என்னுமிடத்து 'உம்'மை யின்றி அவர் உதாரணங்கூறி யிருப்பின் மிகப் பொருத்தமாயிருக்கும்.

சேனாவரையர், 'கோட்டை நுனிக்கட்குறைத்தான்' என்னுமிடத்து நுனிக்கண் என்பது குறைத்தான் என்பதற்கு அடையாய் இடைநின்றவாகலான், கோட்டை, நுனிக்கண் என்பன அடுக்கல்ல என்று உரையாசிரியரை மறுத்துள்ளார். நுனிக்கண் என்பது அடையென்றுகூறுதல் பொருந்தாது என்று நச்சினார்க்கினியர் சேனாவரையரை மறுக்கும்போது 'அவை அடுக்கல்ல' என்றவிஷயத்தை மறுக்கவில்லையென்பது கவனிக்கத்தக்கது.

103-வது சூத்திரம். இறுதியு மிடையு மெல்லா வுருபு
நெறிபடு பொருள்வயி னிலவுதல் வரையார்.

இச்சூத்திரத்திற்கு உரையாசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர்: இம்மூவருங் கொண்ட பொருள் ஒன்றே; அஃதாவது வேற்றுமைத்தொடரிறுதிக்கண்ணும் அதனிடைநிலத்தும் ஆறுருபுக் தத்தமக்கோதிய பொருட்கணிற்றலை வரையார் என்று. ஆனால் உரையாசிரியர் 'ஆடை சாத்தனது', 'சாத்தனது ஆடை' இரண்டிற்கும் பொருளில் மாறுபாடில்லாதது போற் கூறியுள்ளார். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் அவ்விரண்டிற்கும் பொருளில் வேறுபாடுண்டு என்று கூறியுள்ளனர். கண்ணென்னும் உருபேற்றசொல் வினையைத் தழுவினால், அச்சொல் இடையிலிருப்பினும் இறுதியிலிருப்பினும் ஒரே பொருளைக் கொள்ளுமென்றும், பெயரைத்தழுவினால்[1] அப்பெயருக்கு முன்னேயே ஏழனுருபுகொண்ட பெயரைக் கூறவேண்டுமென்றும் சேனாவரையர் தாம் கருதியுள்ளாரென்பதை 'ஏழாவதும்........குன்றத்துக் கட்கூகை என இடைநின்று தம்பொருளுணர்த்தினாற்போலக்' கூகை குன்றத்துக்கண் என இறுதிநின்றவழி அப்பொருளுணர்த்தாமையான், அவ்வுருபுகள் ஆண்டு வரையப்படும்' என்னும் வாக்கியத்தாற் றெரிவித்துள்ளார்.

---

[1] குன்றத்துக்கட் கூகை என்னுமிடத்துக் குன்றத்துக்கண் என்பது கூகையைத் தழுவும்; கூகை குன்றத்துக்கண் என்னுமிடத்து 'இருந்தது' என்பது போலுள்ள தொக்குள்ள வினையைத்தான் குன்றத்துக்கண் என்பது தழுவும்.

சேனாவரையத்தில் 'ஈறுபெயர்க்காகும்' (தொல். சொல். 69) என்றோதப்பட்ட உருபு தம்மையே இறுதியு மிடையும் நிற்குமென வகுத்துக் கூறினரென்பது என்ற வாக்கியம் இல்லாமலிருப்பின் நலம்; ஏனெனில், ஈறு பெயர்க்காகும் என்னுஞ் சூத்திரத்தினல் வேற்றுமையுருபு ஒரு பெயர்ச்சொல்லின் ஈற்றில் வருமென்பது உணர்த்தப்பட்டது; இச்சூத்திரத்தினல் ஒருவாக்கியத்தின் ஈற்றிலும் இடையிலும் வேற்றுமையுருபுகொண்டபெயர் பொருள்வேறுபாடின்மையின் வரலாமென்பது உணர்த்தப்படுகின்றது. ஆதலால், இச்சூத்திரத்திற்கும் அச்சூத்திரத்திற்கும் யாதொருதொடர்பும் இல்லை. சிவஞானமுனிவர் 'கூறிய முறையின் ...' (தொல். சொல். 69) என்பதனல் 'வேற்றுமைத் தொடரின் யாண்டுப் பெயர்நின்றது ஆண்டுப் பெயரிறுதியின் உருபு நிற்குமென்பது தானே பெறப்படுதலின் இச்சூத்திரம் வெற்றெனத் தொடுத்தலாய் முடியுமென்க' என்று சேனாவரையரின்மேற் கூறிய குற்றத்திற்குக் காரணம் இந்த வாக்கியமே; இவ்வாக்கியமில்லாவிடின் சிவஞானமுனிவர் குற்றங்கூறு ரென்க.

சிவஞானமுனிவர் "அங்ஙன முருபுதொடர்ந்தடுக்கும்வழி 'அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்கும்' என்றாற்போல இறுதியு மிடையு முருபுவிரிந்தேநிற்றலை நீக்கார் வட நூலா"ரெனப் பிறர்மதங்கூறி, 'பிறிது பிறிது ......' என்னுஞ் சூத்திரத்தாற் றமிழ்நடையின் அவ்வாறு நியமமின்றி 'அரிக்கும் பிரமற்கும்......' என விறுதியு மிடையு முருபேற்றலும் 'ஒண்டொடிமாதர் கிழவன்கிழத்தியொடு.......' என இடையிற்றெக விறுதியி னுருபுவருதலும் நெறிபடவழங்கிய வழக்கைச்சார்ந்து வருதலான் வழுவாகா என்று கூறியுள்ளார். இங்கு வடமொழி மதங் கூற வேண்டுவது எற்றுக்கு என்பதும், இச்சூத்திரமில்லாவிடின் 'கடந்தான் நிலத்தை' முதலிய பிரயோகம் தமிழ்வழக்கிலுண்டு என்பது எவ்வாறு புலப்படுமென்பதும் ஆராயத்தக்கன.

இச்சூத்திரத்தில் இறுதியு மிடையு மென்பதற்கு வாக்கியத்தின் இறுதியு மிடையு மென்பதுதான் ஆசிரியர்கருத்தென்பது 'ஐயுங் கண்ணும்........' (தொல். சொல். 105) என்னுஞ் சூத்திரத்தால் விளங்கும். முற்சூத்திரத்தில் வேற்றுமைக்கிளவி என்பதற்கு வேற்றுமையுருபை யிறுதியிற்கொண்ட சொல் என்று பொருள்கொண்டதுபோல

இங்கு உருபு என்பதற்கு உருபை யீற்றிற்கொண்ட பெயர் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

நச்சினார்க்கினியத்தில் இச்சூத்திரவுரையி னிறுதியில் 'சாத்தன தாடை என்புழி அதுவென்பது பெயராய்நிற்கும்......... வினைக்குறிப் பாயிற்று என்ற வாக்கியங்கள் உள்ளன. 'அதுவென்பது பெயராய் நிற்கும்' என்னுமிடத்து 'அது' என்பதற்கு அதுவென்னுருபுகொண்ட சாத்தனது என்னுஞ்சொல் என்று பொருள். முன்னரே "இறுதிக்கண் நின்றதேல் வினைக்குறிப்பா மென்றுணர்க" என்று கூறியிருத்தலால், இவ்வாக்கியங்கள் பாடங்கேட்ட மாணாக்கரால் ஏட்டிற் சேர்க்கப்பட்டன வாதல்வேண்டும்.

104-வது • பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலு
சூத்திரம். நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப.

இச்சூத்திரத்துக்கு உரைகாரர்கள் மூவரும் ஒருவகையாகவே பொருள்கொண்டனர். பிறிதுபிறிதேற்றலும் என்பதற்கு ஆறனுருபு மற்றவுருபைக் கொள்ளுதலும் என்று பொருள்கொண்டு சாத்தனதனை, சாத்தனதனொடு...... என்று உதாரணங் கூறினர். இங்கு, சாத்தனது என்பதற்குச் சாத்தனுடைய என்று பொருள்கொள்ளின் அவர்கள் கூறுவது மிகப் பொருந்தும்: இங்குச் சாத்தனுடைய பொருள் என்றே அதற்குப் பொருளாகையால், அது என்பது உருபல்லாமையானும், அஃது ஒருபெயராய்விட்டபடியாலும், பெயரின்பின் உருபுதோன்றுவ தில் யாதொருமாறுபாடு மில்லாமையானும் இச்சூத்திரத்திற் 'பிறிது பிறிதேற்றலும்' என்பதன் பொருள்விளங்கவில்லை.

உருபுதொகவருதலும் என்றது, வேற்றுமைத்தொகைக்கண் உருபு தொக்குவரும் என்பதைமாத்திரம் உணர்த்தற்கு அன்று; இறுதி யிலும் உருபுதொக்குவரும் என்பதைப் பொதுவாய் உணர்த்தற்குமே, பொதுவாய் இங்குக் கூறியதை விசேஷித்து 'ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்' என்ற மேற்சூத்திரத்தில் ஐயும், கண்ணுந்தான் இறுதி யில் தொகும் என்று கூறியுள்ளதைக் கவனிக்க.

106-வது • யாத னுருபிற் கூறிற் றாயினும்
சூத்திரம். பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்.

பாடபேதம்:—இச்சூத்திரத்தினது உரையிற் சேனாவரையப்பதிப்புக்களில் 'நான்காவதன்பொருளோடு ஏழாவதன்பொருட் கேன்னுமியைபின்மையான்........' என்ற வாக்கிய முளது. அங்கு என்னும் என்பதற்குப் பிரதியாக ஒன்றும் என்றாவது என்றும் என்றாவது இருப்பின் நலம்.

111-வது சூத்திரம். ஏனை யுருபு மன்ன மரபின
மான மிலவே சொன்முறை யான.

இச்சூத்திரத்தில் மானம் என்பதற்குக் குற்றம் என்று உரையாசிரியர் முதலியோர் பொருள் கொண்டனர். மானம் என்பதற்குப் பிரமாணம் என்று பொருளேயொழியக் குற்றமென்று பொருள் இருப்பதாகத் தெரியவில்லை. ஹாநம என்ற வடமொழியின் தற்பவமாகிய ஆனம் என்பதற்கு, குற்றமென்று பொருளாம். 'மெல்லெழுத்துமிகினு மானமில்லை' (தொல். எழுத். 341) என்னுமிடத்து மெல்லெழுத்துமிகினும் மானமில்லை என்று பிரித்துப் பொருள்கொண்ட அச்சிட்டோர் இஃதும் வானம் என்று ஏட்டிலிருந்ததை மானம் என்று திருத்தி அச்சிட்டாரோ என்று கருதவேண்டியதாக இருக்கின்றது.

வினையே செய்வது செயப்படு பொருளே
112-வது நிலனே காலங் கருவி யென்றா
சூத்திரம். வின்னதற் கிதுபய னாக வென்னு
மன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
யாயெட் டென்ப தொழின்முத னிலையே.

இச்சூத்திரத்தில் வினை என்பதற்குச் சேனாவரையர் தொழில் என்றே பொருள்கொண்டார் என்பது, 'தொழிலின் வேறாயது காரகமாகலின், வினைதற்றொழிற்கு அத்தொழில்தான் காரகமாமா றென்னையெனின்' என்னும் வாக்கியத்தால் அறியப்படுகிறது. நச்சினார்க்கினியர் வினை என்பதற்கு வினைப்பெயரையும் வினைச்சொல்லையுந் தோற்றுவிக்கும் உண், தின், சொல்......என்பன என்று பொருள்கொண்டு, 'வினையுந் தொழிலும் வேறு' என்று கூறியுள்ளார். சேனாவரையருரையில் வனைந்தான் என்பது வனைதலைச்செய்தான் என்று பிரிக்கப்பட்டு வனைதலைச்செய்தற்குச் செயப்படுபொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்

வாறுயின் சூத்திரத்தில் வினை என்பது எற்றுக்கு என்று ஆராய்தல் வேண்டும். நச்சினுர்க்கினியார் கூற்றுப்படி வினை என்பது உண் முதலாகிய சொற்கள்; அவை தொழிற்குக் காரணமாகுமா என்பதும் ஆராயத்தக்கது. குயவன் குடம் வனைந்தான் என்புழி வனைதற்றொழில் வெளியிற் புலப்படுவதற்குமுன் அத்தொழிலுக்கு இன்றியமையாததான குயவன் சரீரத்திற் சில பிரயத்தினம் நிகழவேண்டுமென்பது திண்ணம். இப்பிரயத்தினத்தைத்தான ஆசிரியர் 'வினை' என்பதாற் கூறியிருத்தல் வேண்டும். வடமொழியாசிரியர்கள் தொழிலுக்காகச் செய்யும் முயற்சியைக் கிருதி (க்ருதி:) என்றும், தொழிலைக் கிரியை (க்ரியா) என்றுங் கூறியிருப்பது, இங்குக் கவனிக்கத்தக்கது. சரீரவமைப்பைப்பற்றியும் அதில் நிகழ்வதைப்பற்றியும் கூறும் Physiology (பிஸியாலஜி) என்ற ஆங்கிலநூலிலும் காரியம் நிகழ்வதற்குமுன் சரீரத்தின் நரம்புகளிற் சில வியாபாரம் (Motor impulse) உண்டாவதென்று சொல்லப்படுவதும் காணத்தக்கது.

முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்
சினையிற் கூறு முதலறி கிளவியும்
114-வது சூத்திரம். பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரு
மியன்றது மொழிதலு மிருபெய ரொட்டும்
வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
யனையமா பினவே யாதுபெயர்க் கிளவி.

இச்சூத்திரத்தில் வினைமுதலுரைக்குங்கிளவி என்பதற்கு உரையாசிரியர் தொல்காப்பியம் கபிலம் என்று உதாரணங்கூறிக் 'கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்........' (தொல். சொல். 117) என்னுஞ் சூத்திரவுரையிற் 'கிளந்தவல்ல பிற என்னது வேறு என்பதனுல் ஆகுபெயர்கள் ஈறுதிரியும் என்பது காட்டுக' என்று கூறியுள்ளார். வினைமுதல் தொல்காப்பியன் கபிலன் என்பனவாதலால், தொல்காப்பியம், கபிலம் என்பன வினைமுதலுரைக்குங் கிளவியாகா: ஆனதுபற்றியே சேனவரையர் தொல்காப்பியனுனும் கபிலனுனும் செய்யப்பட்டநூலைத் 'தொல்காப்பியம், கபிலம் என்றல் வினைமுதலுரைக்குங் கிளவி யென்றுரால் ஊயையாசிரியரெனின்........உரையாசிரியர்கருத்தன்றென்க' என்னுஞ் சொற்றொடரால் மறுத்துக்கூறியுள்ளார். நச்சினுர்க்கினியர்

இச்சூத்திரவுரையிற் சேனாவரையர்கூறியுள்ள இவ்வாடை கோலிகன் என்னு முதாரணங்கூறிக் 'கிளந்தவல்ல....' என்னுஞ் சூத்திரவுரையில் உரையாசிரியர்மதம்பற்றித் தோல்காப்பியம், கபிலம் என்ற உதாரணங் களைக் கூறியுளளார். சிவஞான முனிவர் சேனாவரையர்மதத்தையே கைப்பற்றி 'அவ ராகுபெயர்ப்பெற்றியறிந்திலர்போலு மெனக. ஆகு பெயர்களெல்லாம் நின்றாங்குநின்று இயற்பெயர்ப்பொருளையும், வே றுணர்த்திநிற்குமாற்றலுடையவாதலும் அகத்தியம், தொல்காப்பியம், கபிலம் என்பவற்றிற்கு அவ்வாற்ற லின்மையு மோர்ந்துணர்க' என்று கூறியுள்ளதைக் காண்க.

## இருபெயரொட்டு.

இருபெயரொட்டு என்பதற்கு உரையாசிரியரும் சேனாவரையரும் அன்மொழிப்பொருண்மேனின்ற இருபெயரொட்டு என்று பொருள் கொண்டனர். நச்சினார்க்கினியர் அன்மொழிப்பொருண்மேல் நில்லாத இருபெயரொட்டு என்று பொருள்கொண்டுள்ளார். அவ்வாறு மாறு பட்டுக்கூறுவதற்குக் காரணங் கூறவில்லை. சிவஞானமுனிவர் நச்சினார்க் கினியர்மதத்தைக் கைப்பற்றி 'அது (சேனாவரையர்கூற்று) வடநூல் விதியோடு முரணுகின்றது' என்று காரணங்கூறியுள்ளார். இங்கு வாசகர்கள் ஊன்றிநோக்கவேண்டுவது ஒன்று உண்டு:—தமிழ்மொழி யின் அன்மொழித்தொகை வடமொழியின் அன்மொழித்தொகையை (பஹுவ்ரீஹிஸமாஸ:) முற்றிலும் ஒத்தது அன்று. வடமொழி யில் மஞ்சள் நிறமுள்ள ஆடையைக்குறிக்கும் பீதாம்பரம் (பீதாம்பரம்) என்ற தொடர் அன்மொழித்தொகையாய் ஆண்பாலை யுணர்த்துமிடத்துப் பீதாம்பர: (பீதாம்பர:) [மஞ்சள் நிறமுள்ள ஆடையோன்] என்று வருகின்றது. இவ்வண்ணம் அன்மொழித் தொகை ஆண்பாலைக் குறிக்குமிடத்து ஆண்பால்விகுதியையும் பெண் பாலைக் குறிக்குமிடத்துப் பெண்பால்விகுதியையும் பெறும். அவ்வாறு தமிழ்மொழியில் அன்மொழித்தொகை விகுதிபெறுவதில்லை. பொற்றொடியாள் என்று கூறின், அது தமிழ்மொழியில் அன்மொழித் தொகையன்று. ஆகையால், உரையாசிரியரும் சேனாவரையரும் கூறி யுள்ளதே பொருத்தமானது, சிவஞானமுனிவர் கூறுவது பொருந்துவ தாகத் தோன்றவில்லை.

சேனாவரையர் 'ஆகுபெயர் எழுவாய்வேற்றுமைமயக்கமாதலான் ஈண்டு (இவ்வியலிற்) கூறினாரென்றாரால் உரையாசிரியரெனின்' என்று கூறி உரையாசிரியரை மறுத்துள்ளார். இச்சூத்திரத்தின்கண்ணும் பின்னருள்ள மூன்று சூத்திரங்களின்கண்ணும் இப்போதுபதிப்பித்திருக்கும் இளம்பூரணத்தில் அவ்வாக்கியங்கள் காணப்படவில்லை. இவ்வியவிறுதிச்சூத்திரத்தின்கண் நச்சினார்க்கினியர் இவ்வாகுபெயர்கள் எழுவாய்வேற்றுமைமயக்கமென்று உணர்க என்று கூறியுள்ளார் அவர் உரையாசிரியர்மதம்பற்றியே அவ்வாறு கூறியிருக்கலாம், ஆயினும் உரையாசிரியரைமறுத்த சேனாவரையரை மறுத்து இவ்வாறுகூறியிருப்பின் சிறக்கும்.

115-வது சூத்திரம்.

தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலு
மப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

'தத்தம்பொருள்வயிற்றம்மொடுசிவணல்' என்பது விடாதவிலக்கணையையும், 'ஒப்பில்வழியாற் பிறிதுபொருள்சுட்டல்' என்பது விட்டவிலக்கணையையுங் குறிக்கின்றன. 'வேற்றுமைமருங்கிற் போற்றல்வேண்டும்' என்பதனால் ஆசிரியர் விட்டும்விடாத இலக்கணையைக் கருதினர்போலும். 'வேற்றுமைமருங்கிற்போற்றல்வேண்டும்' என்பதைத் தனிச்சூத்திரமாக உரையாசிரியர்கொண்டதைச் சேனாவரையர் 'அங்ஙனம் பிரிப்பின், தம்மொடு சிவணும் பிறிது பொருள்சுட்டலுமாகிய இவற்றது வேறுபாட்டின்கணென்பது இனிது பெறப்படாமையானும், எழுத்தோத்தினுள், "புள்ளிபிறுதியு முயிரிறுகிளவியும்........ வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்" (தொல். எழுத். தொகை. 14) என்னுஞ்சூத்திரத்து 'இங்கிகர்ப் பாது காவலைப் பிரியாது ஒன்றாகவேயுரைத்தலானும், அவர்க்கது கருத்தன்றென்க' என்று மறுத்துள்ளார். இம்மறுப்பை மறுக்காமல் நச்சினார்க்கினியர் உரையாசிரியர்கூறியவாறே கூறியுள்ளார். அவ்விருவரும் 'அவ்வாகுபெயரெல்லாம் வேற்றுமையொடு தொடர்ந்த மருங்கினைப் போற்றியறிக' என்று அதற்குப் பொருள்கொண்டனர். வேற்றுமை என்பதற்கு வேறுபாடு என்று கொள்ளாமல் வேற்றுமையுருபு என்று பொருள்கொள்

ளின், 'போற்றல் வேண்டும்' என்பது பொருந்துமாவென்று ஆராயத் தக்கது.

சேனாவரையர் 'கடுவென்னு முதற்பெயர் முதலோடொற்றுமை யுடைய சினைமேனிற்றல் தத்தம்பொருள்வயிற் றம்மொடு சிவணலாம்' என்று கூறி, குழிப்பாடி என்னுமிடப்பெயர் இடத்தின் வேறாய ஆடைமேனிற்றல் ஒப்பில்வழியாற் பிறிதுபொருள்சுட்டலாம் என்று கூறுகின்றனர். விட்டலட்சணை விடாதலட்சணை என்பவற்றையே இச்சூத்திரங் குறிக்கின்றது என்பதைக் கவனித்திருப்பின் அவர் அங்ஙனங் கூறார். கடுத்தின்றான் என்னும் தொடரைக் கடுச்செடியினிடஞ்சென்று அச்செடியிலுள்ள கடுவைத்தின்னும்போது பிரயோகித்தால்தான் சேனாவரையர் கூறுவது பொருந்தும். அங்ஙனமில்லாத கடுவைத்தின்னும் போது 'கடுத்தின்றான்' என்றால், அஃது ஒப்பில்வழியாற் பிறிது பொருள்சுட்டல் என்பதற்கே உதாரணமாகும். தத்தம்பொருள்வயிற் றம்மொடுசிவணுதற்கு 'ஊர் அடங்கிற்று' என்பது தெளிவான உதாரணம்.

116-வது அளவு நிறையு மவற்றொடு கொள்வழி
சூத்திரம். யுளவென மொழிப வுணர்ந்திசி னோரே.

இச்சூத்திரவுரையில், சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் எண்ணுப்பெயர் எண்ணப்படும்பொருளை யுணர்த்தும்வழி ஆகுபெயரன்று என்று கூறியுள்ளனர். சிவஞானமுனிவர் அதனை மறுத்து ஆகுபெயராகக்கொண்டு 'உரையாசிரியருக்கும் இவற்றையாகு பெயரென்றலே கருத்து' என்று கூறியுள்ளார். சேனாவரையர் கூறியுள்ளது வடமொழிக்குப் பொருந்துமே தவிரத் தமிழ்மொழிக்குப் பொருந்தாதென்று தோன்றுகின்றது.

வேற்றுமை மயங்கியல் முற்றிற்று.

[தொடரும்.]